Registered as a News Paper பக்கங்கள்: 08 விலை ரூபா: 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 24 (09 - 08 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 172

## கல்வியமைச்சின் கடிதம் தொடர்ந்து சிங்களத்தில்

(நல்லூர்)

கல்வி அமைச்சினால் அனுப்பப்படும் கடிதங்கள் தற்போது பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுகின்றன. தமிழ்மொழி பெயர்ப்பு இக்கடிதங்களுடன் இடம்பெறுவதில்லை. அண்மையில் சித்திரப்போட்டி 1990 க்குரிய இறுதி நிகழ்ச்சிகள் அமைச்சர் அத்துலத்முதலி தலைமையில் நடைபெற உள்ளதாக கல்வித் (8 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவுப்பெரும்போரில் ஐந்நூறு புலிகள் வீரமரணம்

## பல நூறு இராணுவத்தினரும் பலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாம மீதான தாக்குதலிலும், கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கிய இராணுவத்தினருடனான மோதலிலும இதுவரை ஐந்நூறு புலிகள் வீரமரணமடைந்துள்ளார்கள். அதேவேளை இராணுவத்தரப்பிலும் பலநூறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

புலிகளின் போராட்ட வரலாற்றில் மிகக் குறுகிய காலப்பகுதியில் இவ் எண்ணிக்கையில் வீரமரணங்களைச் சந்தித்தது இதுவே முதற்தடவையாகும். இம்மாபெரும் மரபுவழிப் போர் முறையின் உயிரிழப்பானது விடுதலைப் புலிகளின் மன உறுதி மரணத்தைவிட மேவி நிற்பதைக் காட்டுகின்றது.

அதேவேளை இராணுவத்தரப்பிலும் ஐந்நூறிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கான தரவுகளை காலத்துக்குக் காலம் வெளிவந்த செய்திகள் தெரிவிக்கின்றன. இராணுவ தரப்பில் 17 ஆம் திகதியும், 20,21 ஆம் திகதி ஆகிய மூன்று நாள் மோதல்களில் மட்டும் 200க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே.

## பெருந்தொகையான மக்கள் மாவீரருக்கு அஞ்சலி

(முல்லைத்தீவு)

சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீர மரணமடைந்த நான்கு போராளிகளுக்கு நேற்று முல்லைத்தீவு மாவட்ட மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இரண்டாவது லெப் பானு இரண்டாவது லெப். கீரன், வீரவேங்கைகள் கலைச்செல்வன், சங்கர் ஆகியோரின் புகழுடல்கள் நேற்று முள்ளியவளையில் உள்ள மாவீரர் மண்டபத்தில் வைக்கப்பட்ட போது பெரும் திரளான மக்கள் வந்து அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்ற போது முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. செல்வமும், மக்கள் உறவுக்கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. சிங்கன் ஆகியோர் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாவீரர்களின் புகழுடல்கள் இராணுவ மரியாதைகளுடன் முள்ளியவளை மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

## மகளை களம் அனுப்பும் பெற்றோர்

(பண்டத்தரிப்பு)

தமிழீழ மண் மீட்புப்போர் வெற்றிபெற வேண்டிப் பண்டத்தரிப்பில் ஓர் குடும்பஸ்தர் தனது மகளை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தாமே விரும்பி இணைத்துள்ளனர். பண்டத்தரிப்பு பிரான் பற் (8 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டினால்காயம்

(யாழ்ப்பாணம்)

வசாவிளானில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் குப்பிளானைச் சேர்ந்த திரு. அரியகுட்டி வயது 48) என்பவர் படுகாயமுற்றநிலையில் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு)

## எறிகணை வீச்சு

(பொன்னாலை)

காரைநகரில்இருந்து பொன்னாலை, மூளாய் ஆகிய பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணை வீச்சு நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலைத் தொடர்ந்து இப்பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலும் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலில் பெரியளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை. (க)

# ஆனையிறவில்தொடர்ந்தும்மோதல்; 5 படையினர் பலி; 27 பேர் படுகாயம்

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாமின் சூழலில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் மோதல்கள் இடம் பெற்றன. இம்மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை ஆனையிறவு முகாமின் ஒருபகுதியான உப்பள முகாமின் தென்மேற்குப் பக்கமாக உள்ள தடடுவன் கொட்டி பகுதியிலும், வடமேற்கு மூலையான குறிஞ்சாத்தீவு உப்பளப்பகுதியிலும் இம்மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன,

ஆனையிறவு முகாமினுள் இருந்து இராணுவத்தினர் புலிகளின் காவல் அரண்கள் நோக்கி முன்னேற முற்பட்டபோதே இம்மோதல்கள் மூண்டன.

இம் மோதல்களை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இதில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 27 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் தெரிவித்தது.

சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில், ஆனையிறவு முகாம் சுற்றிலும் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் தாக்குதல் நடத்திவருவதாகவும் தெரிவித்தது.

## முன்னாள் ஈரான் பிரதமர் குத்திக்கொலை

இஸ்லாமியப் புரட்சிக்கு முன்னர் ஈரானின் பிரதமராக கடமையாற்றிய ஹாபூர் பக்தியார் பாரிசில் அவரது இல்லத்திற்கு முன்பாக நேற்றுக் காலை படுகொலை செய்யப்பட்டார். இவருடன் அவரது மெய்க்காவலரும் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அண்ணியைக் கத்தியால் குத்திக்கொன்ற மைத்துனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியில் இளைஞர் ஒருவர் தனது அண்ணனின மனைவியைக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இராமசாமி சீதாதேவி என்ற முப்பது வயது பெண்மணியை அவரது மைத்துனர் குடும்பத்திலேற்பட்ட ஒரு தகராறு காரணமாக துரத்தித்துரத்திக் (8 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் வீட்டின் மீது விமானக் குண்டு வீச்சு

(சாவகச்சேரி)

மீசாலை ஐயா கடையடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10-45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் வீடொன்று முற்றாகச் சேதமடைந்துள்ளது. வயோதிபப் பெண்ணொருவர் காயமுற்றார். வீட்டினுள் இருந்தவர்கள் வீட்டுக்கு வெளியில் படுத்திருந்தமையால் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளனர் அயலில் உள்ள மேலும் இரு வீடுகளும் சேதத்திற்குள்ளாயின. (மு) (86)

## இளைஞர் காயம்

(ஏழாலை)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நள்ளிரவு வேளை எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஏழாலைப்பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் செல்லையாகுமாரவேல்(வயது 28) என்பவர் காயமடைந்து தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது வீடும் சேதமடைந்துள்ளது. (ச)

## சிப்பாய்கள் சடலம் ஏற்றும் வடபகுதி லொறிகள்

(வவுனியா)

வடபகுதியைச் சேர்ந்த தமிழர்களின் லொறிகளில் அனுராதபுரம் வைத்தியசாலையில் குவிக்கப்பட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தின் சடலங்கள் ஏற்றப்பட்டு, அவரவர்களின் சொந்த வீடுகளுக்கு அனுப்பப்படுகின்றன என்று தெரிய வருகிறது.

வவுனியாவிற்கு தெற்கே உள்ள சிங்களப் பகுதிகளில் தரித்து நிற்கும் தமிழர்களின் லொறிகள் இராணுவத்தால் பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்டு, ஆனையிறவு முகாம் பகுதியில் கொல்லப்படும் இராணுவத்தின் சடலங்கள் அனுராதபுரம் வைத்திய (8ஆம் பக்கம் பார்க்க)

## முரல் பாய்ந்து மீனவர் படுகாயம்

(மானிப்பாய்)

கட்டுமரத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோதுமுரல் மீன் வயிற்றில் குத்தியதால் மீனவர் ஒருவர் ஆபத்தான நிலையில் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அராலிக் கடலில் சுதுமலையைச்சேர்ந்த க. பாக்கியராசா (வயது 40)

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலையின் பின்னணியில் உள்ளோரை இ. காங். மறைக்க முயற்சி -- ஜோதிபாசு

(கல்கத்தா)

ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னால் உள்ளவர்களை மறைக்க இந்திரா காங்கிரஸ் கட்சி முயல்வதாக மேற்கு வங்காள முதலமைச்சரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமான ஜோதி பாசு குற்றம் சாட்டியுள்ளார்.

விசயத்தை திசைதிருப்பும் வகையில் தமது அரசியல் விரோதிகளுக்கு எதிராக காங்கிரஸ் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அத்தியாவசிய பொருள்கள் கட்டுப்பாடு நீக்கம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு உணவுப்பொருள்களை எடுத்துச் செல்ல எந்தவிதக் கட்டுப்பாட்டையும் விதிப்பது இல்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி நேற்று பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உணவுப்பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களும் தேவைப்படமாட்டாது அத்தியாவசிய தேவைகளுக்கான பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் அதிகாரம் தற் (8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**தேவை**

வேப்பம் விதை, இலுப்பம் விதைகள்தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். (B/2920)

**மலிவு விற்பனை**

A/L, O/L, ஆண்டு 5 'புலமைப்பரிசில்) பரீட்சைகளுக்கான Tutes மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond புத்தக நிலையம் 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (B/2891)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**சித்த மருத்துவப் பிரிவிற்கு 1990 / 91 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்.**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி எஸ். எம். எஸ். பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

தகைமைகள்:

(அ) 1987, 1988, 1989 ஆகஸ்ட் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல்ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 1991 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

21-09-1991 இல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவும் உடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் பிரதிப் பதிவாளர் (தேர்வுகளும் அனுமதிகளும்) தேர்வுக்கிளை, அவர்களிடமிருந்து ரூபா 10-00 செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23 x 10 செ.மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு விலாசமிட்டு, ரூபா 10-00க்கான காசுக் கட்டளையை, நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்டு அத்துடன் அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
**02-09-1991**

— பதிவாளர்
(B-2925)


## புதிய சர்வதேச

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

1987-ம் உலக அரங்கில் முதன்மை பெறத் தொடங்கியது. ஆயினும் கொர்ச்சேவையும் அவர் முன்வைத்த கொள்கையையும்கண்டு அமெரிக்க ஆட்சிப்பீடம் அஞ்சியது. கொர்பச்சேவையும் அவரது கொள்கையும் தமக்கு ஆபத்தானது என்று கருதிய அமெரிக்க அரசு சற்று நிலைதடுமாறியது. அமெரிக்காவில் செல்வாக்கு மிக்கவரும், கைதேர்ந்த இராஜதந்திரியும் ஆகிய ஹென்றி கீஸிங்கர், கொர்பசேவினது கொள்கைகளைப் பற்றியும், அவரைப் பற்றியும் அமெரிக்க அரசை எச்சரித்தார். கொர்பசேவ் முன்வைத்த ஐரோப்பிய பொதுக் குடும்ப கொள்கையானது (European Common Home) அமெரிக்காவை ஐரோப்பாவிலிருந்து அப்புறப்படுத்துவதற்கான ஓர் உள் நோக்கம்கொண்ட கொள்கை என்றும், கொர்பசேவ் ஒரு தனிநபர். அவரின் மீது நம்பிக்கை வைத்து ஏமாத்திடக் கூடாது போன்ற கருத்துக்களை முன்வைத்தார்.

ஆயினும் மேலைத் தேசத்தில் சிலரால் கொர்பச்சேவ் புன்னகை இராஜதந்திரி என்றும், ரஷ்ய கெனடி என்றும், ஸ்கான்டிநேவியப் பாணியிலான சமூக ஜனநாயகவாதி என்றும், சமூக ஜனநாயகப் புரட்சியாளன் என்றும்அழைக்கப்பட்டார்.

எப்படியோ கொர்பசேவின் திட்டங்களுக்கும், அவர் முன்வைத்த மாற்றங்களுக்கும் ஈடுகொடுக்க வேண்டிய பொறுப்பு அமெரிக்காவிற்கு ஏற்பட்டது. நீண்டகால நோக்கில் அமெரிக்க அரசுநடைமுறைப்படுத்தி வந்த கொள்கையை மாற்றி, புதியதோர் கொள்கையை உருவாக்க வேண்டி ஏற்பட்டது. அமெரிக்க அரசு இதற்கென ஓர் ஆய்வில் ஈடுபட்டது கொம்பியூட்டரின் உதவியுடன் நாட்டின் முன்னணிப் புத்திஜீவிகளை இணைத்து பென்ரகன் நடாத்திய ஆய்வில் கொர்பசேவ் முன்வைத்துள்ள பெரஸ்ரொய்கா வெற்றி அளிக்குமானால் 2010 ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் பெரிதும் முன்னேறி விடும் என்றும், அது அமெரிக்காவை வெல்லக்கூடிய நிலையை அடைந்துவிடும் என்றும் கண்டறியப்பட்டது. (இந்த ஆய்வு நூலின் பெரும்பகுதி இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது ) ஒரு சிறுபகுதிமட்டுமே வெளியிடப்பட்டுள்ளது.

கொர்பசேவ் முன்வைத்த உலக அமைதிக்கான சமாதானத் திட்டங்களும், அணு ஆயுதக்குறைப்பு, ஏவகணை அகற்றல், படைக்குறைப்பு பற்றிய கருத்துக்களும், அமெரிக்காவை நோக்கிய அழைப்புக்களும், ஐரோப்பாவிலும் முழு உலகிலும் கொர்பசேவை உலக சமாதானத்தின் தூதனாகக் காட்டியது. கொர்பசேவ் வர்க்கம் கடந்த உலகளாவிய மனிதநேயம் பற்றியும், சூழல் பாதுகாப்பு, இயற்கை பாதுகாப்பு பற்றியும் பேசினார். ஒருவகையில் உலகின் அமைதி, பாதுகாப்பு, சமாதானம் பரஸ்பரம் அன்னியோன்னியம் போன்றவற்றின் நவீன இரட்சகராயும் உலகிற்குக் காட்சியளித்தார். இந்நிலையில் கொர்பசேவுக்கு ஈடுகொடுக்கும் கொள்கையை வகுக்க முற்பட்ட அமெரிக்கா கொர்பசேவ் எந்தப்பாதையை முன்வைத்துப் பேசினாரோ அந்தப்பாதையில் அவரை அளவுக்கு அதிகமாகத் தூண்டுவதன் மூலம் தோற்கடிக்கும் திட்டத்தை வகுத்தது.

கொர்பச்சேவின் வேண்டுகோளுக்கு அமெரிக்கா மறுக்குமானால் அமெரிக்காதான் உலகின் சமாதானத்தின் எதிரி என்ற நிலை ஏற்படும். எனவே கொர்பசேவ் முன்வைத்த கொள்கையை ஏற்று அதனை அதிக உச்சக்கட்டத்திற்குத் தள்ளுவதன் மூலம் சோவியத் யூனியனை நிலைதளரச் செய்யலாம் என அமெரிக்கா நம்பியது. கொர்பசேவ் அறிவித்த மாற்றங்களை அமெரிக்காஏற்றுக்கொள்ளும் அதே வேளை உள்நாட்டில் கொர்பசேவ் ஜனநாயக மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்றும்; கிழக்கைரோப்பிய நாடுகள் தன்னிச்சையாக செயல்பட சோவியத் அனுமதிக்க வேண்டும் என்றும் அமெரிக்கா வற்புறுத்தியது. மேலும் படைக்குறைப்பு, படைவாபஸ் போன்ற கொள்கைகளை கொர்பசேவ் முதலில் அமுல்படுத்திக்காட்ட வேண்டும் எனவும் அமெரிக்கா வற்புறுத்தியது. கொர்பசேவின் சீர்திருத்தங்களை வரவேற்று மேலும் அதனைத் தூண்டி உள்நாட்டில் சீர்குலைவை உருவாக்குவதில் அமெரிக்கா கண்ணாய் இருந்தது. சோவியத் பெரஸ்ரொய்க்கா எனும் மாற்றத்துக்கு உட்பட்டமைக்கான உண்மையான காரணம் பொருளாதார வளர்ச்சியின்மையும், தொழில்நுட்ப பற்றாக்குறையுமேயாகும். இதனால் கொர்பசேவ் சோஷலிஸ அமைப்பிற்குப் புதுசக்தி ஊட்ட பெரஸ்ரொய்க்காவை திட்டமிட்டார். இவரது உண்மையான திட்டத்தில் ஒரு கட்சி ஆட்சிமுறை, மக்களையும் கட்சியையும் அரசையும் நெருக்கமாக ஐக்கியப்படுத்திய புதிய அபிவிருத்திக்கான விரைவான வழி என்பனதான் காணப்பட்டன. ஆனால் புறநிர்ப்பந்தத்தின் நிமித்தம் இவர் தனது உண்மையான திட்டங்களைக் கைவிட வேண்டி ஏற்பட்டது.

சோவியத்யூனியனின் பலம், பலவீனங்களைச் சரிவரப் புரிந்து கொண்ட அமெரிக்கா அதற்கேற்ப தனது எதிர்த்திட்டங்களை வகுத்தது. சோவியத் யூனியனுக்குத் தேவைப்பட்ட பிரதான விடயம் அபிவிருத்திக்கான உதவி, அமெரிக்கா மாற்றங்களைத் தூண்டியது. ஆனால் அது உதவி செய்யவில்லை. உதவிக்கான நிபந்தனைகளாக உள்நாட்டு ஜனநாயக மாற்றம் பால்டிக்குடியரசுகளின் சுதந்திரம்பற்றிய கோரிக்கைகளை அதிகரித்துச் சென்றது. மேலும் தனது கொல்லைப் புறமான நிக்கரக்குவாவிலும், கியூபாவிலும் மற்றும் மத்திய அமெரிக்கநாடுகளிலும் சோவியத் யூனியனது ஆயுதம், மற்றும் இதர ஆதிக்க நிலைகள் கைவிடப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா வற்புறுத்தியது. குறிப்பாக நிக்கரகுவாவில் ஒட்டேகா அரசாங்கத்துக்கான ஆயுத உதவியை நிறுத்துவதுடன் அங்கு தேர்தலை வைக்குமாறு அமெரிக்கா சோவியத்திடம் கேட்டது. நிக்கரக்குவாவை சோவியத் யூனியன் அமெரிக்காவிடம் தாரைவார்த்துக் கொடுத்த விடயம் இங்கு பிராந்திய அரசு ரீதியில் தனி முக்கியத்துவம் வாய்ந்தது.

இன்னுமோர் முக்கிய அம்சத்தையும் இங்கு நோக்குதல் அவசியம். அமெரிக்காவை ஏகாதிபத்திய அரசென்றும் சோவியத் யூனியனை சமூக ஏகாதிபத்திய அரசென்றும் சீனா வரையறுத்திருந்தது. இதன்படி ஏகாதிபத்தியத்தை விட சமூக ஏகாதிபத்தியம் அதிகம் ஆபத்தானது என்பதே சீனாவின் கருத்து. எனவே சோவியத்தில் மாற்றத்திற்கான அறிவிப்புகள் வெளியானதும் அமெரிக்காவைப் போலவே சீனாவும் சோவியத் யூனியனுக்கு பல நிபந்தனைகளை விதித்தது. இதன்படி கம்பூச்சியா, வியட்நாம், மொங்கோலியா, சீன - சோவியத் எல்லைப் படைக்குவிப்பு சம்பந்தமான பல நிபந்தனைகளை சீனா சோவியத்துக்கு விதித்தது. ஆனால் சீனா, சோவியத்தின் உள்நாட்டு அரசியல் சம்பந்தமான நிபந்தனைகளை விதிக்கவில்லை.

★ பக்கம் 5 இல் குறிப்பிட்டபடி 2ஆம் அத்தியாயத்தையும் இவ்வாரம் வெளியிட முடியவில்லை. இரண்டாம் அத்தியாயத்திலிருந்து அடுத்த வாரம் தொடரும்.


# கண்ணீர் அஞ்சலி

27-07-1991 அன்று ஆனையிறவில் இடம் பெற்ற மோதலில் வீரமரணமடைந்த தையிட்டி காங்கேசன் துறையைச் சேர்ந்த

## வீரவேங்கை அல்பேட் (பாபு)

### (நடராசா கலைச்செல்வன்)

ஓ நண்பா! நீ எங்கு
சென்றாய் எமைப்பிரிந்து?
ஓ நீ சுதந்திரக்காற்றைச்
சுவாசிப்பதற்காக தியாக
வேள்வியில் நீயும் ஒருவனாகி விட்டாயடா!
உனக்காக எமது
கண்ணீர் அஞ்சலி!

தையிட்டி நண்பர்கள்,
(R/ 1625)

# நினைவு கூருகின்றோம்...

## 1991 - 08 - 09





**மேஜர் ஜேம்ஸ் ஞானம்**

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்காப்படையினரின் தாக்குதலில் காயமுற்று சிகிச்சையின் போது வீரமரணமெய்திய

**வசந்தா** (மஞ்சுளாதேவி அந்தோனிப்பிள்ளை - வண்ணாங்குளம் முல்லைத்தீவு)

அச்சுவேலியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரமரணமெய்திய வலிகாமம் பொறுப்பாளர்

**மேஜர் ஜேம்ஸ்** (உருத்திராபதி சிறீதர் - நெடியகாடு வல்வெட்டித்துறை)

இவருடன் வீரமரணமெய்திய

**ஞானம்** (ஐயாத்துரை கோபாலகிருஷ்ணன் - யூலன் வீதி, அச்செழு)

வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கபட்ட இரு பெண்கள் உட்பட 19 தமிழர்கள்

யாழ். புகையிரத நிலைய அகதிமுகாம் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலின் காரணமாக உயிரிழந்த பெண்

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தில் சிறிலங்காப்படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

அராலித்துறையில்சிறிலங்காப்படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மகன்


ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/ 2916)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி



சயனைட் எமது கையில் இருக்கும் வரை நாங்கள் இந்த உலகத்தில் யாருக்கும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை.

-தளபதி கிட்டு


### வீரச் சுவடுகளின் பதிவுகள்!

அறுவடை ஆகி
கணந்தோறும் விளைந்து
புரட்சியில் பூத்து நிற்கும்
உறுதியின் உறைவிடம்
இதுவன்றோ—

வீரச் சமர் புரிந்தவர்
விடுதலை வேள்வியில்
வெந்து தணிந்தவர்
மாவீரர்கள்—

பொன்னுடல்கள் புதைந்த
பூந்திடல
அழியாது எரிந்தெழுந்து
பூகம்பமாய் புடைத்தெழும்
நாளை—
புதியதோர் தேசம் மலரும்.

-டானியல் சௌந்திரன்







"குகதாஸ் காயப்படாத நாட்களே இல்லையென்று சொல்லலாம்." குகதாஸைப் பற்றிய - அனைத்து போர்க்கள அனுபவங்களை பற்றிய அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்ட அவனது நண்பரொருவர் கூறிய இது. ஒவ்வொரு சம்பவமாக அவன் காயப்பட்ட நிகழ்வுகளைப் பட்டியலிட்டுக் கொண்டே சென்றார் அவர். பெரும்பாலும் ஒவ்வொன்றிலும் மரணத்தின் வாசல்வரை தட்டிவிட்டுவந்த காயங்கள்தாம் அவை.

'அல்பேட்வீடு.' இது 1987-ம் ஆண்டுக்கு முன்னர் தமிழீழத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய சிறிலங்கா இராணுவ முகாமான பலாலி முகாமிலிருந்து பெருமளவில் வெளியேறி இனப்படுகொலைகளைப் புரியப் புறப்படும் சிங்கள இராணுவத்தினருக்கு துப்பாக்கியால் பதில்கொடுக்கும் ஒரு பிரதான முகாம். அது மட்டுமல்ல தமிழீழத்தினுள் கால்வைத்தால் உங்களுக்கு நிம்மதியான உறக்கம்கூடக் கிடைக்காது என அடிக்கடி சிங்கள இராணுவத்தினருக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் முகாமும்கூட. அப்படியான முகாமில் உள்ள போராளிகளில் ஒருவனாக விளங்கியவன்தான் குகதாஸ்.

பரந்தனில் உள்ள தனியார் கராஜ் ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த இவனுக்கு 1983-ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. அப்போதிருந்து 'எப்பஎன்னை முழுநேரமாய்ச் சேர்த்துக் கொள்ளுவீர்கள்' என்று கேட்டுக்கொண்டே இருந்தான். எதிரியைத் துப்பாக்கி முனையில் சந்திக்க வேண்டும் என்ற அவசரம் இவனுக்கு. ஆனால் உதவியாளன், பகுதிநேர உறுப்பினன் என்ற நிலையையெல்லாம் தாண்டிவர ஒரு வருடகாலம் பிடித்தது. இவனுக்கோ பொறுமையில்லாதிருந்தான். ஆனாலும் என்னசெய்வது? பல்லைக் கடித்துக் கொண்டு காத்திருந்தான். 1984 ஆம் ஆண்டிலேயே முழுநேர உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டான். உடனே பயிற்சி பெற கடல்கடந்து சென்றான். பயிற்சி முடிந்து வந்ததும் அவனது எதிர்பார்ப்புப்போலவே அடிக்கடி சண்டைக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் முகாமான அல்பேட் முகாமுக்கு இவன் அனுப்பப்பட்டான்.

ஒவ்வொரு சண்டையிலும் தனது திறமையையும், வீரத்தையும் நிரூபித்தான். அதே வேளை முகாமில் ஒரு குழப்படிகாரனாகவே பெயரெடுத்தான். அல்பேட் முகாமில் குழப்படிக்காக அதிக தடவை தண்டனை பெற்றவனும் இவனே. ஆனால் அடுத்த நிமிடமே பழைய கலகலப்பு இவனில் குடிகொண்டு விடும். உடனே கும்மாளம் தான்.

1986-ம் ஆண்டில் இரண்டாவது தடவையாக இவன் காயப்பட்டான். அதற்காக இந்தியாவுக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டான். காலில் விழுந்த சூடு, காலில் ஒன்றரை அங்குலத்தை குறைத்துவிட்டது. அதன்பின் ஊனம் உடலில் மட்டுமே இருந்ததேயொழிய இவனது உள்ளம் பழையமாதிரியே இருந்தது. 1987-ம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இவன் இந்தியாவிலிருந்து தமிழீழத்துக்கு வந்தான்.

இந்திய இராணுவத்துடன் மோதல் தொடங்கியதும் குகதாஸ் பழையபடி தோளில் துப்பாக்கியுடன் உலாவத் தொடங்கினான். இந்திய இராணுவத்தினருக்கு மிகவும் தொல்லை கொடுத்தவர்களில் இவனும் ஒருவன். இவனால் அவர்களுக்கு வாழ்க்கையே வெறுத்தது. குகதாஸ் எங்கே நிற்பான் என்று தெரியாது. ஆனால் குகதாஸின் வேட்டுகள் மட்டும் அவர்களைத் தினசரி சந்தித்துக்கொண்டேயிருந்தன. இவனுக்காகவே சில மேலதிக முகாம்களையும் திறக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது இந்திய இராணுவத்தினருக்கு.



மேஜர் குகதாஸ்

ஒருநாள் கும்மிருட்டுநேரம் இவன் போகும் பாதையில் இவனுக்காகவே காத்திருந்த இந்தியப் படையினர் இவன் மேல் பாய்ந்து பிடித்தனர். நீண்ட நாட்களாக அவர்களைப் படாதபாடு படுத்திய இவன் அவர்கள் கையில் கிடைத்ததும் அவர்களுக்குப் பெரிய திருப்தி. அடுத்த சில நாட்களிலேயே இவனுக்காகத் திறக்கப்பட்ட முகாம்களை மூடிய இந்தியப் படையினர் "குகதாஸைப் பிடிக்கத்தான் இந்த முகாம்களை அமைத்தோம் இவன் பிடிபட்டுவிட்டதால் இனி இந்த இடங்களில் முகாம்கள் தேவையில்லை என்பதால் இங்கிருந்த இந்த முகாம்களை எடுக்கிறோம்" என்று பொதுமக்களிடம் கூறிவிட்டுச் சென்றனர்.

இந்தியச் சிறையில் மிகக் கடுமையான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட போராளிகளில் இவனும் ஒருவன். கையிலவயரும் டிரேலரும் சுற்றி வெடிக்க வைத்தனர். அவர்களது வானொலிதான் அன்புமழி. அப்படி, இப்படி என்று கூக்குரல் இட்டதேயொழிய இவனுக்குச் செய்யப்பட்ட சித்திரவதைகள் அதற்கு எதிர்மாறானவையாகவே தான் இருந்தன.

இவனது இருப்பில் சங்கிலி போட்டு போராளிகளையும் ஆதரவாளர்களையும் காட்டித் தருமாறு கூட்டிச் சென்றனர். இவ்வாறு ஒருநாள் கல்வாசத்திற்கு இவன் கூட்டிச் செல்லப்பட்டபோது அங்கிருந்து பாய்ந்தோடிவிட்டான். ஒன்றரை அங்குலம் குறைவாக உள்ள ஒருவன்-சித்திரவதையால் தேகநிலை பாதிக்கப்பட்டவன் ஓடும்போது ஒழுங்கான கால் உள்ளவர்களால் அவனைத் துரத்திப் பிடிக்க இயலாமற் போயிற்று. குகதாஸிடம் ஒட்டம் பயின்ற அவர்கள் மூச்சிரைக்க முகத்தைத் தொங்கப் போட்டபடி காங்கேசன்துறைக்குத் திரும்பினர். போகும்போது தமது இயலாத்தனத்தின் வெளிப்பாட்டை சில அப்பாவிகள் மேல் காட்டிவிட்டுச் சென்றனர்.

தப்பி ஓடிய இவன் தன்னை நேசித்த மக்களிடம் அடைக்கலம் தேடினான் அவர்கள் இவனைப் பொத்திப் பொத்திப் பாதுகாத்தனர். இவன் உறங்கும் நேரங்களில் அவர்கள் விழித்திருந்தனர் இவனைப் பாதுகாக்க.

குகதாஸ் இந்த மண்ணிலே தான் இருக்கிறான் என்பதை மீண்டும் ராணுவத்துக்கு நிரூபித்துக்கொண்டிருந்தான் அவன். 1989 ஆம் ஆண்டில் ஒருநாள் ஜாலியாக சைக்கிளில் ரோந்து சுற்றப் புறப்பட்டனர் இந்தியப்படையினர். முகாமிலிருந்து புறப்பட்ட ஒன்பதுபேர் கொண்ட ஒரு குழுவினர் சைக்கிளின் இருக்கையில் அமராது ஹரியரில் இருந்து சைக்கிளை ஓட்டியபடி வந்தனர். அச்செழுவில் ஒருவீட்டிலிருந்து இதைக் கவனித்துக்கொண்டிருந்த குகதாஸும் கண்ணாடி ராஜனும் மற்றும் சில போராளிகளும் இந்த மண்ணில் "இந்தளவு ஆசையெல்லாம் உங்களுக்கு வரக்கூடாது" என்று துப்பாக்கியால் செய்தி சொன்னனர். வந்த ஒன்பதுபேரில் எட்டுப்பேர் ஸ்தலத்திலேயே பலியானனர். ஒரு இராணுவத்தினன் மட்டும் சைக்கிளைப் போட்டுவிட்டு முகாமுக்குத் தப்பி ஓடினான். அதன்பின் வழக்கம்போல் வீடெரிப்பு-ராமாயணம் உண்மையோ பொய்யோ ராமாயண காலத்திலிருந்து இந்தியாவிலிருந்து வரும் மனிதர்களினால் எமது மண் தீப்பட்டப்படுகிறது என்பது மட்டும் உண்மை.

மூன்றுதினங்கள் செல்ல அப்பகுதிக்குச் சென்றான். அப்பகுதி மக்களுக்கு இவனுடன் கொஞ்சம் மனத்தாங்கல் இருந்தது என்பது மட்டும் உண்மை; இவ்வளவு நாள் இவனைப் பாதுகாத்து ஆதரித்த எமக்கு இந்த நிலை வரச் செய்துவிட்டானே என்று. உடமைகளை இழந்திருந்து அந்தனையும் இழந்த ஒரு தாயிடம் சென்றான். "உங்களுக்கு என்னில ஆத்திரம் இருக்கும் என்டு எனக்குத் தெரியும். அப்


(6 ஆம் பக்கம் பார்க்க)

# கடைசிச் சொத்து

சிறுகதை

விஜயன் - மணலாறு

கோடைகாலத்தின் ஆதிக்கம் முடிவைநோக்கி செல்லும் ஆனிமாதம். பகலில் வெய்யிலின் அகோரமும், அதிகாலையில் பனியின் குளிரும் இருப்பதால் முரண்பட்ட இக்கால நிலை செம்மலைக் கிராமத்தை பெரிதும் பாதித்திருந்தது ஆனாலும் கடற்கரையை அண்டியதாக எனது வீடு இருந்ததால் காலைச்சூரியனின் தரிசனத்துடன் கண் விழிக்க மெல்லிய கடற்காற்று உடலைத்தொட்டுச்செல்லும். வழமையான காலையிலும் பாடசாலைக்குச் செல்லும் கடமை இருப்பதால் அவசரம்அவசரமாக காலைப் பணிகளை முடிக்க தொடங்கினேன். வீட்டின் அருகாமையில்கடற் கரை நோக்கிச் செல்லும் வீதியில் அன்று ஆரவாரம் மிகுதியாக காணப்பட்டது. பலர் கடற்கரை நோக்கி ஓடிக்கொண்டிருந்தனர்.

"இரத்தினண்ணோய்! இரத்தினண்ணோய்! ஏன் ஓடுகிறீங்கள் என்ன விசேடம் கடற்கரையில" என்று கேட்ட எனக்கு இரத்தினண்ணன் பதில் சொல்லவில்லை, ஓடிவாருங்கோ! என்பதற்குப் பதிலாக கையைமட்டும் காட்டினார். நானும் கடற்கரைக்கு விரைந்தேன். கடலில் இருபதுக்கு மேற்பட்ட படகுகள் அளவுக்கு அதிகமான மக்களைச் சுமந்து நின்றன. சில படகுகள் கரைசேர்ந்திருந்தன. கடலிலும் கரையிலும் மக்கள்வெள்ளம். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை படகுகள் வந்து கொண்டிருப்பதையும் அவதானித்தேன். அதிகாலையில் பனிச் சோளகம் வீசுவதால் அமைதியாக இருக்கும் கடல் அன்று வழமைக்கு மாறாக ஆர்ப்பரித்து அடித்துக்கொண்டிருந்தது. அலைபார்த்து கரைசேர நிற்கும் படகுகளில் இருந்த மக்களின் முகங்களில் அவசரம் தெரிந்தது. இறங்கிய மக்களிடமிருந்து, படகோட்டியும், உரிமையாளனும் ஆளுக்கு ஐநூறு ரூபா வசூலித்துக்கொண்டிருந்தனர்.

மண்மீட்பு யுத்தத்தில் மீண்டும் ஒருமுறை கிழக்கு சகோதரர்கள் இடம் பெயர்வதை உணர்கின்றேன். ஆனால் இம்முறை ஒரு வேறுபாடு இருந்ததையும் அறிகின்றேன். எரிபொருள் தடையுடன் தரைவழிப்பாதையும், கடல்வழிப்பாதையும் தடுக்கப்பட்டுள்ளன. தமிழர்களை ஓடமுடியாமல் தடுத்து அழிக்க சிங்கள அரசு முடிவுசெய்துவிட்ட உண்மை புலனாயிற்று. ஓநாய்களின் வாயில் அகப்படாது போக தப்பிவிட்ட தமிழுயிர்கள் ஓடிவரும் படகுகள்தான் அனைத்தும். அதுவும் வசதிபடைத்தவர் தம் உடைமைகளுடன் ஓடிவந்த படகுகளே முதலில் கரைசேர்ந்திருந்ததை சிலமணித்தியாலங்களின் பின் தெரிந்துகொண்டேன். உடைமைகளைப் பறிகொடுத்து வந்தவர்கள் ஒருபுறமும், உடைமைகளுடனேயேதப்பி வந்தோர் இன்னொருபுறமும், உடைமைகளுடன் உயிர்கள் சிலவற்றையும் பறிகொடுத்து வந்தவர்கள் வேறொருபுறமுமாக கடற்கரை அமளிதுமளிப்பட்டது.

அந்த அகால காலைவேளையில் நடந்துகொண்டிருந்த சோகக் கதையில்தப்பிலிகளும், கட்டிப் பிழைப்போரும் வெகு வேகமாக இயங்கிக்கொண்டிருந்தனர். போரும் பொருளாதார தடையும், இடப்பெயர்வும் அவர்களின் சம்பாதிப்புக் காலங்களல்லவா. படகுச் சொந்தக்காரனின் ஐநூறு ரூபா வசூலிப்பில் திக்கற்று வந்தவர் பலரின் தோடுகளும், சங்கிலிகளும் பலியாகிக் கொண்டிருந்தன. வசதியுடன் வந்தவர்களது மோட்டார் சைக்கிள்களும், சைக்கிள்களும் பாதி விலையிலும் குறைவாக விற்பனையாகிக் கொண்டிருந்தன. வெள்ளிப் பாத்திரங்கள் இன்னொரு புறம் மலிவு விலையில்... எல்லாமே படகுக் கூலிக்காக பணம் பெறும் விற்பனைகள். தட்டிப்பிழைக்கும் முதலாளிக் கும்பல்களின் வாய்க்குள் திக்கற்ற ஏழைகளின் கடைசிச் சொத்துக்கள் இரையாகும் ஒரு மலிவுச் சந்தை அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கரையில் தாயின் மடியில் கைக்குழந்தையொன்று தாயின் பாலுக்காய் அழுது கொண்டிருந்தது. பிள்ளைக்கு பால் கொடுக்கும் நிலைமறந்து நீண்ட கடல்வெளிப்பரப்பை வெறிக்க பார்த்துக் கொண்டிருந்த அந்தத் தாயின் கழுத்தில் மஞ்சள் கயிற்றில் கட்டப்பட்டிருந்த தாலிமட்டும் இருப்பதை அவதானித்தேன் காதுகள் வளையலை இழந்து பல ஆண்டுகளாகி விட்டதை பழைய தழும்புகள் காட்டின. அந்த வறுமையின் வடிவத்திடம் படகுக் கூலிக்காய் நச்சரித்துக் கொண்டிருந்தான் படகுச்சொந்தக்காரன். 'கணவன் பின்னால் வரும் படகில் வருகிறார்; வந்ததும் தருகிறேன்' என்று பலமுறை கூறியும் அந்த படகுக்காரன் செவிமடுக்காததால் தன்னிடமிருந்த தாலியைக் கழற்றி அவனது கைகளில் திணித்தாள். இரக்கமற்ற, சிந்தனையற்ற அந்த மனித மிருகமும் கூசாமல் அதை வாங்கிச் சென்றது. ஆனால் அதன் மிகுதிப் பணம் திருப்பி கொடுக்கப்படவில்லை. 'தட்டிக் கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப்பிரசண்டம்' என்ற நாட்டுப் பழமொழியின் அர்த்தத்தை அங்கு காணமுடிந்தது.

கடலில் நின்ற படகுகள் ஓங்கி எழுந்த அலைகளைப் பாராது பரபரப்புடன் கரையை நோக்கி விரைந்தன. பரபரப்புக்கு காரணமிருந்தது. கொக்கிளாய்க்கு நேரே கடலில் வந்த மக்களின் படகுகளை சிப்பாய்களும், இல்லவரும் இடைமறித்து தாக்குவதாக ஒரு படகுக்காரன் உரத்தகுரலில் கூறினான், இலங்கை கடற்படையின் விசைப்படகுகள் பீரங்கிக்குண்டுகளை வீசும் சத்தம் கேட்க தொடங்கியது. தப்பிஓடிவரும் தமிழர்களுக்கு இந்த நிலை என்றால் ஓடமுடியாது இருந்த தமிழர்களின் நிலையை ஈழத் தாயின் புத்தகத்தில் தான் பார்த்தறியவேண்டும்.

கடற்படைத் தாக்குதலுக்கு தப்பியசில படகுகள் வேகமாக வந்துகொண்டிருந்தன. கரையில் நின்ற எம்கிராம இளைஞர் சிலர் கொடிகாட்டிபடகுகளைகரைக்குவரவழைத்தனர் படகுகளில்இருந்தகுழந்தைகள் மீண்டும் தம்மை இராணுவம் கூப்பிடுவதாக கருதி அழத் தொடங்கிவிட்டனர். கரையேறிய இரு படகுகளை மணற்பரப்பில் இழுத்து ஏற்றினோம்; அந்தப் படகுகளில் கண்டசோகம் ... ... ... உடல் சிலிர்த்தது. ஏழு உடல்களையும் பல காயமுற்ற குழந்தைகளையும் இனங்காணும் முயற்சி வேகமாக நடந்தது.

கணவனையும் இரு குழந்தைகளையும் எதிர்பார்த்துக் கொண்டு நின்ற தாயொருத்தி ஓடிவந்தாள். அங்கே தன் ஏழுவயது பெண் குழந்தையும், கணவனும் பிணமாய் கிடக்க, பதினெட்டு வயது பெண் இடையில் துப்பாக்கி குண்டுபட்டு மயக்கமுற்று கிடக்க... ... ... ... வார்த்தைகளற்று வாயடைத்து நின்ற அந்த தாய் ... ... ...

கணவனை காத்திருந்து கடைசியில் தாலியைகொடுத்த அந்தப் பெண்ணும் கணவனை தேடி ஓடிவந்தாள். அவளது கணவனும் பிணமாகிக் கிடக்க ... ... ... அந்த பெண்ணின் அழுகுரல் வான்வெளிப் பரப்பை பிளக்க ......... எத்தனை அவலம்; எத்தனை சோகம்; என்னென்ன கொடுமைகள் பிறந்த மண்ணில் இப்படியும் வேதனைகளா? ஏதுமறியாது தாயின் மடிக்குள் கிடந்த குழந்தையும் அழுதது.

காத்திருக்க அவகாசமில்லை தாமதித்தால். விமானங்கள் தாக்கத் தொடங்கிவிடும். படகில் வந்த உடல்களை மயானத்துக்கு கொண்டு செல்ல முடிவு செய்தோம். ஆனால் அவர்களைத்தூக்க எவரும்தயாராக இல்லை. வேடிக்கை பார்ப்பவர்களும் விமர்சனம் செய்பவர்களும், தனிச்சமூகம் அடிப்போரும் எம்மினத்தில் இன்று அதிகம். அவர்களால் இந்த அதிகாலையில் எப்படி பிணங்களைத் தூக்க முடியும்? ஐந்து பேருடன் அவற்றை எடுத்துச்சென்று புதைத்தோம். திரும்பி வரும் போது புலிகளின் இராணுவ வண்டிகள் சில கடற்கரையில் நின்றிருந்தன. தொலைத் தொடர்பு கருவிகளில் அவசரஅவசரமாக அவர்கள் எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

"சொந்த மண்ணில் எமது மக்கள் யாரும் அகதிகளல்ல, அவர்கள் இடம்பெயர்ந்து வந்தவர்கள்; அகதி என்ற முத்திரையை நாம் பொறிக்கக் கூடாது; நீங்கள் இவ்வாறு ஓடிவர இன்னொருவர் உங்களை அகதி என்றழைத்தால் உங்களின் மனம் எவ்வளவு புண்படும்". என்று புலேந்தி அம்மான் என்றோ சொன்ன வார்த்தை என்மனதில் எழுந்து ஒலித்தது. வந்தமக்களின் பசிதீர்க்க அவர்களை பாடசாலை நோக்கி அழைத்துச் செல்கின்றேன். சில நிமிடங்களில் பாடசாலை சுமைதாங்கியாக மாறியது. கிழக்கில் எம்மண் விடுதலை பெறவேண்டும் என்ற ஆசையுடன் மறைந்த லெப். கேணல் புலேந்தி அம்மானின் வார்த்தைகள் நெஞ்சில் மீண்டும் மீண்டும் எழுந்தது. கண்களில் நீர் முட்டிதிரையிட்டது. மறைந்த அந்த வீரனை நினைத்தா அல்லது கணவனை இழந்த தாயையும், குழந்தையையும் சுமந்துசெல்லும் அந்தவீரர் வாகனத்தைப் பார்த்தா என்பது எனக்கே தெரியவில்லை கண்ணீர்த்திரையில் மங்கலாய்த்தெரிந்த அந்த வாகனங்களில் படகிலே வந்த இளைஞர்கள் யுவதிகள் பலர் நிறைந்து நின்றனர். அவர்கள் தம் கடைசிச்சொத்தாகிய மண்ணையாவது மீட்கவேண்டும் என்ற உறுதியோடு பாசறைக்குவிரைந்தனர். புதிதாக உருவாகும் இந்தப் பயணம் இடம் பெயரும் பயணமல்ல; இழந்தவைகளை மறந்துஇருப்பதை மீட்கச் செல்லும்பயணம் என்ற உண்மையை உணர்ந்த போது கண்களில் நிரம்பிய நீர் நிலத்தில் விழுந்து சிதறியது.

□□□



கவிதை

## பிரிகின்ற இளைஞர்கள் விலங்குடைக்க எழுவர்

கார்இருள் விலகி கதிரவன்
கதிர்கள் கண்ணைத் தொட்டன
கண்விழித்துப் பார்த்தேன்
கடந்த நிகழ்வுகள் கண்முன்னே ஓடின

எனது சுவாசப்பையிலிருந்து
அவர்களுக்கு சாத்திய மலர்களின்
வர்த்திக் குச்சியின் மணமும்
இதுவரை அகலவில்லை

இவர்களது கனவுகளும்
கற்பனைகளும் கனிவதற்கு
இன்னும் வெகுகாலம் இல்லை

இருந்த போதிலும்;
ஒன்றாக உலாவிய
உள்ளங்கள் உணவையும்
உணர்வையும் பகிர்ந்த
பாசங்கள் விட்டுப் பிரிந்த
வேதனை விழிகளில்
முட்ட நினைவலைகள்

நீங்காமல் வந்து
கொண்டே இருக்கிறது
படையணிகள் தயாராக
நாம் பாய்ந்து முன்னேற
தயார் என்று அவர்கள்
புன்சிரிப்பும் கண்ணில்
தோன்றிய மின்னல் ஒளியும்
ஜாடைகாட்டிச் சென்றது

வேகம் தணியாத வீறுநடை
களைப்பில்லாத பொறுமை
கண்ணிமைக்கும் நேரத்தில்
எதிரியின் உயிர்களை
காவுகொள்ளக் காத்து நிற்க
அவன் எண்ணத்தை நிறைவேற்றும்
நேரமும் வந்து சேர
வேகமான தாக்குதல்
வீரத்துடன் முன்னேறி
வீழ்த்தியோர் போக
விரட்டியடிக்கப்பட்டனர்

காயமடைந்தவர்கள் கண்முன்னே செல்ல
சுவாசத்தை மட்டும்
நிறுத்திவிட்டு சுகமாக
படுத்திருக்கும் சுதந்திரத்தை
தேடிய மலர்கள்
வாடாமல் வருகிறோம்
கலங்காதே உனது சுமை
கூடியுள்ளது ஆனால்
அதை எம்மைவிட்டு
பிரிகிற வீரத்தமிழ்
இளைஞர்கள் பகிர்ந்து கொள்வர்

வீரமுடன் சேர்ந்து கொள்வர்
வீறுகொள்வர்
வென்றிடுவர் பகையை
விலங்குடைப்பர்.

-இலக்கியன்

# புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோஷங்களின் அடிப்படையில் 1789-ம் ஆண்டு பிரான்சில் ஏற்பட்ட புரட்சி மனிதகுல வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இற்றைவரை அதன் தாக்கம் உள்ளது. இவ்வாறு புரட்சி நிகழ்ந்து 200 ஆண்டுகள் கழிந்து 1989-ம் ஆண்டு கிழக்கைரோப்பாவில் ஒரு புரட்சி உதயமாகியது. இப்புரட்சி சர்வதேச அரசியல் ஒழுங்கை பிரமாண்டமான அளவு மாற்றியமைத்து விட்டது. 1789-ம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சி முதலில் பிரான்சிலும் அதனைத் தொடர்ந்து மேற்குலகிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 20-ம் நூற்றாண்டிலதான் பிரஞ்சுப் புரட்சியின் சிந்தனை உலகின் ஏனைய பாகங்களுக்குச் சென்றடைந்தது. ஆனால் 1989 ஆம் ஆண்டு கிழக்கைரோப்பியப் புரட்சியோ ஒரே நேரத்தில் கிழக்கைரோப்பாவிலும் சர்வதேச அரசியல் ஒழுங்கிலும் மாற்றத்தை ஏற்படுத்திய புரட்சியாக உள்ளது.

இதுவரை இருந்துவந்த கெடுபிடி யுத்த (Cold war) சர்வதேச அரசியல் ஒழுங்கை இந்தப் புரட்சி முடிவுக்குக் கொண்டுவந்தது. 1945-ம் ஆண்டு இரண்டாம் உலகமகா யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்கா, சோவியத்யூனியன் ஆகிய இருபெரும் அரசுகள் உலகப் பெரு வல்லரசுகளாயின. இவ்விரு பெரு வல்லரசுகளையும் மையமாகக்கொண்டு உலகம் ஏதோ ஒரு வகையில் இருபெரும் போக்குகளைக் கொண்ட பிரிவுகளாயின.

'கொம்யூனிஸ ஆபத்தில்' (Red danger) இருந்து ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாகக் கூறித் தனது தலைமையில் அமெரிக்கா 'நேட்டோ' எனும் அணியை உருவாக்கியது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோஷலிஸத்தைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் என்று கூறி சோவியத் யூனியன் தனது தலைமையில் 'வார்சோ' எனும் அணியை உருவாக்கியது. இவ்வாறு சித்தாந்த வடிவம் கொடுத்து அணிகள் அமைக்கப்பட்டன. இவ்வாறு உருவாக்கப்பட்ட கெடுபிடி யுத்தப் போட்டிக்குள் இந்த முழு உலகமுமே இழுத்து விடப்பட்டது.

கெடுபிடியுத்தம் என்பது அரசியல், பொருளாதாரம், இராணுவம், தொழில் நுட்பம், கைத்தொழில் மற்றும் தேசநலன்கள் ஆகிய அனைத்தையும் தழுவிய ஒரு யுத்தமாகக் காணப்பட்டது.

இந்த கெடுபிடி யுத்தப் போட்டியில் இருந்து சோவியத்யூனியன் பின்வாங்கிக் கொண்டதும் அல்லது விலகிக்கொண்டதும் கெடுபிடி யுத்த சர்வதேச அரசியல் ஒழுங்கு என்பது முடிவுக்கு வந்தது. அவ்வாறாயின் சோவியத் யூனியன் ஏன் பின்வாங்கியது என்பதை ஆய்வு செய்வதன் மூலமே புதிய சர்வதேச அரசியல் ஒழுங்குபற்றிய நியதிகளை விளங்கிக் கொள்ள லாம்.

முழு உலகத்தையும் ஒரே நேரத்தில் பாதித்த இந்த மாற்றத்தின் பிறப்பிடம் சோவியத் யூனியன் ஆகும். 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் கோர்பச்சேவ் சோவியத் கொம்யூனிஸக் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்ந்து எடுக்கப்பட்டதிலிருந்து மாற்றம் கருக்கொள்ளத் தொடங்கியது. இதன் 'பொருளாதாரம் மறுசீரமைப்பு (Perestroika) திறந்த தன்மை (Glasnost) என்னும் கொள்கைகளை கோர்பச்சேவ் முன்வைத்தார். இந்த மாற்றம் ஒரு தற்செயல் நிகழ்வல்ல. சோவியத் யூனியனில் மாற்றத்துக்கான தேவை நீண்ட காலமாக உணரப்பட்டு இருந்தது. அதிகாரத்துவத்தின் வெளிப்பாடே மறுசீரமைப்பும் திறந்த தன்மையுமாகும்.

ரொஸ்கிக்கும், ஸ்ராலினுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு இந்த மாற்றத்துக்கான வரலாற்றுப் போக்கின் தொடக்கப் புள்ளி எனலாம். 1953-ம் ஆண்டு ஸ்ராலின் காலமானதைத் தொடர்ந்து மாற்றத்திற்கான கொள்கைகள் முன்னிலைக்கு வந்தன. ஸ்ராலினின் மறைவைத் தொடர்ந்து 1955-ம் ஆண்டுவரை பதவியில் இருந்த இடைக்கால ஆட்சியாளர்கள் (புல்கானின் மலன் கோவ்) உடனடிச் சூழலைச் சமாளிப்பதில் அக்கறை செலுத்தினர். இவர்களின் பின் குருசேவ் பதவிக்கு வந்தார். ஸ்ராலினை அம்பலப்படுத்தல், கொம்யூனிஸக் கட்சியை ஜனநாயகமயமாக்கல் என்ற அரு கொள்கையின் அடிப்படையில் மிக்கோயான் குழுவினர் குருசேவுக்கு ஆதரவு அளித்தனர்; இதனை ஒப்புக்கொண்டு இக்கொள்கையுடையவர்களின் ஆதரவையும் பெற்றுப் பதவிக்கு வந்த குருசேவ், முதலாவது கொள்கையாகிய ஸ்ராலினை அம்பலப்படுத்துதல் என்பதை நிறைவேற்றினாரே தவிர கட்சியை ஜனநாயகமயப்படுத்தவில்லை. மேலும் அரசியல் பொருளாதார அமைப்பிலும் குறிப்பிடக்கூடிய அளவு மாற்றங்கள் நிகழவில்லை.

குருசேவின் பின்பு பிரஷ்நேவ் 1964-ம் ஆண்டு பதவிக்கு வந்தார். ஸ்ராலின் மீண்டும் சோவியத்தில் உறுதிப்படுத்தப்பட்டார். மாற்றங்கள் சோவியத் யூனியனுக்குள்ளோ அன்றி சோஷலிசமுகாமைக்குள்ளோ

**மு. திருநாவுக்கரசு**

நிகழவில்லை. சோஷலிஸ முகாம் இரண்டாக உடைந்தது. குருசேவ் காலத்தில் உடைந்த சீன சோவியத்உறவு பிரஸ்நேவ் காலத்தில் மீண்டும் விரிவடைந்தது.

''சோஷலிஸமுகாம்'' இரண்டாக உடைந்ததைத் தொடர்ந்து முதலாளித்துவ முகாமுடனான போட்டி பலவீனமடைந்தது சோஷலிஸ அரசுகள் தம்மை ஒரு முகாமாக அமைத்து சோஷலிஸ முகாமுக்கான பொதுவான பொருளாதார உறவையும், வளர்ச்சியையும் சட்ட முடியவில்லை. மேற்குலகுடன் ஒப்பிடுகையில் சோவியத் யூனியனுடைய பொருளாதாரம், கைத்தொழில், தொழில்நுட்பம் உற்பத்தித்திறன் என்பன குறைந்த தரத்திலேயே இருந்தன, மேலே கூறியபடி கெடுபிடி யுத்தம் என்பது இராணுவப் போட்டி மட்டுமல்ல. அதனுடன் கூடவே பொருளாதாரம், கைத்தொழில், தொழில்நுட்பம் போன்ற இன்னோரன்ன விடயங்களை

> மாவீரர் கப்டன் ஹீ:ரோராஜ் நினைவாக மு. திருநாவுக்கரசு அவர்கள் வெளியிட்டுள்ள ''புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு'' நூலின் முதலாம், இரண்டாம் பகுதிகள் இவை. மிகுதி அடுத்த வாரம் வெளியாகும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு நாடு இரு இராணுவம்; இலங்கையின் இன்றைய நிலை

முற்றுகைவிடப்பட்டுள்ள ஆனையிறவு இராணுவ முகாமிற்கான பயங்கரமான போரினைப் பார்க்கும் போது சிறிலங்காவில் இரு சமபலங் கொண்ட இராணுவங்கள் மோதுகின்றன என்ற உண்மை தெளிவாகின்றது. இப் போர் நீண்டு கொண்டு போவதால் இவ்வுண்மையானது தேசிய எண்ணத்தில் ஒ தாக்கத்தை மெதுவாக ஏற்படுத்தக் கூடும்.

நேற்றைய (27.7.91) அரசினால் நடாத்தப்படும் ஆங்கிலத் தினசரியில் 'இருசாராரும் தமது நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்'' ஒரே மூச்சில் கவமுடையவர்களென நிலைநாட்டப் பார்க்கின்றனர். அரசாங்கப்பாதுகாப்புச் செயலர் விமானப் படைத் தளபதி வால்டர் பெர்னாண்டோவிடமிருந்து பத்திரிகையாளருக்குக் கூறியதாவது ''இரு சாராருமே இக்கட்டான நிலையில் உள்ளனர். இது ஒரு கௌரவப் பிரச்சினை மட்டுமல்லாது இதுவரை காணும் இடம் பெறாத பெருமளவிலான இராணுவத்தினரைக் கொண்ட இராணுவ நடவடிக்கையினை தொடரவேண்டும்; இரண்டு பகுதியும் விட்டுக் கொடுக்கும்நிலையில் இல்லை.

இந்த இராணுவத்தினர் புலிகளை ஊடறுத்து மூன்றுமைல்களைக் கடந்து ஆனையிறவு இராணுவ முகாமைச் சென்றடைவது இப் போதைய வினா

வல்ல. 8000 துருப்பினரை இப் பணியில் ஈடுபடுத்தியபின் இவர்களுக்கு வேறு வழியில்லை.

இப் பொழுது எழுந்துள்ள கேள்வி என்னவெனில் இந்த யுத்தம் முடிவடைந்தபின் விடுதலைப்புலிகள் தமது தேசிய இராணுவம் தமது தாயகத்தைப் பாதுகாக்கும் பலம் கொண்டதெனக் கூறும் அரசியல் கோரிக்கைக்கு மேலும் ஆதரவு கிடைத்துவிடும் என்பதாகும். இந்தக் கருத்தைதமிழ் மக்கள் மத்தியிலும் மேற்குலக நாடுகளிலும் வலியுறுத்த விளையும் அதே வேளையில் ஆனையிறவு இராணுவ முகாமின் 800 இராணுவத்தினரின் இராணுவத்தளபாடங்களைக் கைப்பற்றவும் விரும்புகின்றனர். இப்படியான போர்கள் எதிர்காலத்தில் தொடருமாயின் சிறிலங்கா இரண்டு இராணுவங்களைக் கொண்ட நாடு என்ற கருத்து உறுதிப்படுத்தப் படுவதை தடுக்க முடியாது.

விடுதலைப்புலிப்படையினர் தொழில் நுட்பம், மதிநுட்பம் நிறைந்த மரபுவழிப்போராளிகளா இல்லையா என்பதுபிரச்சினையல்ல. இவ் விடயத்தில் பலர் தமது மூளையைக் குழப்பிக் கொள்கின்றனர். இதன் பயனாய் உதயமாகும் அரசியல் பின் விளைவுகள் இந்நாட்டின் பௌதீக இணைப்பு ஒன்றாய் காணப்பட்டாலும் சிறிலங்கா அரசின்அரசியல் ஒன்றிணைப்புக்குச் சவாலாக உருவெடுக்கும். இதுதான் இறுதி யுத்தம் எனக்கருதுவது தவறு. மடமை. கடந்த தைமாதத்தில் விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தம் செய்ததை புலிகள் ஒய்ந்து விட்டனர். இனிமேல் அவர்களால் ஆயுதம் ஏந்தி போராட முடியாதென எண்ணிய அரசாங்கம் அவர்களின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை நிராகரித்தது அதன் பின்னர் தான் மன்னாரிலும், வவுனியாவிலும் புலிகள் பயங்கர மோதல்களில் ஈடுபட்டனர். ஆகவே புலிகள் ஆட்பலமோ, ஆயுத பலமோ அற்றவர்கள் என நினைப்பது தவறாகும். இப்போது புலிகளை வெளிவரச் செய்து ஆட்பலத்தையும், ஆயுத பலத்தையும் குறைக்கின்றோம் என புதியகருத்து அரசால் முன் வைக்கப்படுகின்றது. தனிகரத்தடிப்படை வீரனே தனது எதிரிக்கு முகம் கொடுக்க முன் தன்னிடமுள்ள தோட்டாக்களை கணக்கெடுக்கத் தவற மாட்டான் என்பதால் இக் கருத்து மீள் பரிசீலனை செய்யப் பட வேண்டியதொன்றாகும்.

> இதுதான் இறுதியுத்தம் எனக் கருதுவது தவறு, மடமை, தனிக்கரந்தடிப்படை வீரன்தனது எதிரிக்கு முகம் கொடுக்கமுன தன்னிடம் உள்ள தோட்டாக்களை கணக்கெடுக்கத் தவறமாட்டான்.

எனவே ஆனையிறவுப்போர் இறுதிப் போரென நினைப்பது விடுதலைப்புலிகளைக் குறைத்துக் கணிப்பதாகும். இப் போரில் ஆனையிறவு முகாமில் உள்ள ஆட்லெறிகள், ஆயுதங்கள் புலிகள் வசம் வீழ்ந்தால் நிச்சயமாக போரின் தன்மை மாறுபடும்; கைப்பற்றப்படும் ஆயுதங்களைப் போரின் பரிமாணத்தையே மாற்றி விடும். இதற்காகவே எண்ணாயிரம்

ளோர் வீரர்களும் பெருமளவிலான இராணுவ சாதனங்களும் இம் முகாமை கைப்பற்றுவதற்காகப் பயன் படுத்தப்படுகின்றன. புலிகள் சளைத்துப் போவார்கள் என்ற கோட்பாட்டுக்காரர்களின் எண்ணத்துக்கு மாறாக புலிகள் ஓர் சிறந்த மரபுவழி இராணுவமாகவும் மன்னாரின் தென மேற்கிலும், கிழ்மாகாணத்திலும் கரந்தடிப் படையாகவும் செயற் படுவர்.

பொறுப்பற்ற மனநிலை சரியில்லாத ஒருவனால் தான் நாட்டின் அரசியல் தலைமையிடம் தனது ஆட்பலத்தையும் ஆயுதபலத்தையும் இழந்துநிற்கும் விடுதலைப் புலிகளை விரைவில் ஒழித்துக் கட்டி விடலாம் என வெகு முயற்சி எடுத்து ஆனையிறவை வென்ற பின் அப்போரின் தாக்கத்தை சரியாக கணிக்காமல் கூறமுடியும்.

> இப்படியான போர்கள் எதிர்காலத்தில் தொடருமாயின் சிறிலங்கா இரண்டு இராணுவங்களைக் கொண்ட நாடு என்ற கருத்து உறுதிப் படுத்தப்படுவதைத் தடுக்கமுடியாது.

இப்படியான தொடர்ந்த போர்களால் இத்தேசத்தில் இரண்டு சம பலமுள்ள இராணுவம் உண்டு என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படுமாயின் தமிழீழ விடுதலைப் புலிகளை பொறுத்தவரை இத்தீவில் இரண்டு தேசங்கள் உண்டு ஒரு தேசிய இனத்திற்கு நாடு உண்டு. மற்றைய தேசிய இனத்திற்கு நாடுதேவை என்ற நமது கோரிக்கையை வலியுறுத்துவது சுலபமாக இருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அதிகாரபூர்வ வெளியீட்டின் ஆசிரியர் தலையங்கத்தில் இத்தீவில் இரண்டு இராணுவம் இருப்பதே தமக்கு ஓர் தாயகம் உண்டு என்பதை அது (அங்கீகரிக்கப்படாதபோதும்) உறுதிப்படுத்துவதாகும். எனக் குறிப்பிட்டுள்ளனர்.

மிகப் பெரிய ஓர் மரபுவழி இராணுவத்தை விடுதலைப் புலிகள் கட்டி வளர்ப்பதன் நோக்கம் ஒருதலைப்பட்சமாக தனி நாடு பிரகடனம் செய்ய அல்ல. அது இந்தியஆதரவு பெற்ற ஒருவன் மட்டும் செய்ய எண்ணுவான். தன்னாட்சி உரிமையுள்ள ஓர் கூட்டாட்சியை உருவாக்க முயல்வதே அவர்கள் நோக்கமாகும்.

இது 1989 பிற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மேற்குலகநாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட உறவால் வந்த புதிய சிந்தனையாகும். இந்தியாவின் தலையீட்டை தவிர்த்து மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதே இதன் நோக்கமாகும்.

பெருமாளின் காலத்தில் இன் மதவாதத்தைக்கைவிட்டு அந்தச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தாமல் விட்டதன் விளைவேஇன்று அரசு எதிர்கொண்டுள்ள இந்த இரண்டு இராணுவப் பிரச்சினையாகும்.

இந்த இரண்டு இராணுவ நிலை இத்தீவு குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை சீர்குலைக்கக் கூடியது.

இன்றுள்ள இன, மதவாத அரசியலை மாற்ற துணிகரமான நடவடிக்கை எடுப்பதன் மூலம் இரண்டு இராணுவம் இருப்பதால் ஏற்படக் கூடிய அரசியல் தாக்கத்தை தவிர்க்க முற்படாது போனால் தொடரும் போர் விடுதலைப்புலிகள் தமது அரசியல் இலக்கை அடையவே வழி செய்யும்.

-நன்றி; த ஐலண்ட்

(28-7-91)

> 28-07-1991 இல் தீ ஐலண்ட் பத்திரிகையில் ஆனையிறவுப்போர் பற்றிய தாராக்கி எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

## புதிய சர்வதேச..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் உள்ளடக்கியது என்ற வகையில் கெடுபிடி யுத்தப் போட்டியில் தோல்வி நிலையிலேயே சோவியத் யூனியன் இருந்தது.

சோவியத் யூனியனுடனான உறவில் இருந்து பிரிந்த சீனா சோவியத் யூனியனை விடவும் கைத்தொழில், தொழில் நுட்ப வளர்ச்சியில் குறைந்த நிலையிலேயே இருந்தது. இத்துறை சார்ந்த அபிவிருத்தி மொ[illegible]த்து ஒரு வகையில் உலகில் இருந்து தனிமைப்பட்டே சீனா இருந்தது.

இந்நிலையில் அமெரிக்காவுடன் உறவுகொள்ள சீனா தயாரானது அமெரிக்காவின் நிக்ஸன் காலத்தில் சீன-அமெரிக்க உறவு உருப்பெறத் தொடங்கியது. மா-ஓ-சேதுங்கின் மறைவைத் தொடர்ந்து பதவிக்கு வந்த டெங்சியாஓபிங் நான்கு வகை நவீனமயமாக்கற் கொள்கையை முன்வைத்து 1978இல் பொருளாதார சீர்திருத்தங்களை உருவாக்கினார். இத்தேவைக்கேற்ப கட்சியிலும், அரசியல் நிறுவனங்களிலும் சில மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

சோவியத் யூனியனது தொழில்நுட்பம் மிகவும் பற்றாக்குறையுடையதாக உள்ளது, குறிப்பாக அமெரிக்காவின் தகவல் விஞ்ஞானம் (Information Science) தகவல் தொழில்நுட்பம் ( nformation Technology) என்பனவற்றுடன் சோவியத் யூனியனால் போட்டியிட முடியாது உள்ளது. சோவியத் யூனியனது தொழில்நுட்பப் பற்றாக்குறையைப் பற்றியும் பழைய ரக இயந்திரங்களைக் கைவிட்டு புதிய ரக இயந்திரங்களுக்குப் போகவேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் கொர்பசேவ் தனது 'பெரஸ்ரொய்க்கா' எனும் நூலில் ஒரு அத்தியாயத்தில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இந்த வகையில் சோவியத்யூனியனில் மாற்றம் பெரிதும் உணரப்பட்டது. சீனாவில் மாற்றம் ஏற்பட்டு பத்து ஆண்டுகளின் பின்பு சோவியத் யூனியனில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இந்த வகையில் இரு பெரும் சோஷலிச அரசுகளுக்குள்ளும் மாற்றம் உணரப்பட்டு அவை தொடக்கி வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. ஆதலினால் தான் இந்த மாற்றத்தைத் தற்செயலல்ல, ஒரு வரலாற்று நியதி என நான் குறிப்பிடுகின்றேன். ஆகவே, சீனாவில் ஏற்பட்ட மாற்றத்தை சிறிய பெரஸ்ரொய்க்கா எனவும், சோவியத்யூனியனில் ஏற்பட்ட மாற்றத்தை பெரிய பெரஸ்ரொய்க்கா என்றும் கனாபூர்வமாகக் குறிப்பிடலாம்.

சோவியத் யூனியனில் ஏற்பட்ட மாற்றத்தின் போது மறுசீரமைப்பு (Perestroika) திறந்ததன்மை Glasnost துரிதப்படுத்தல் (Uskorenie) மந்தகாலம் (Periodzastoya) ஆகிய பதங்கள் அதிக பிரபல்யம் அடைந்தன. மறுசீரமைப்பு என்பது அரசியல், பொருளாதாரம், வெளியுறவுக் கொள்கை என்பனவற்றில் செய்யப்பட்ட புனர் நிர்மாணமாகும். திறந்ததன்மை என்பது மக்கள் அரசியலில் பங்கெடுக்கக்கூடியவாறு அரசியல் நிறுவனங்கள் திறந்துவிடப்பட வேண்டும், வெகுஜனத் தொடர்புசாதனங்கள் திறந்துவிடப்பட வேண்டும், கடந்தகால இரகசியங்கள், பிழையான தகவல்கள், அரசின் பொய்மைகள் என்பன அம்பலப்படுத்தப்பட்டு மக்கள் உண்மைகளை அறியக்கூடிய நிலை என்றும் திறந்துவிடப்பட வேண்டும். எமக்குக் காற்று எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்குத் திறந்ததன்மை அவசியம். திறந்ததன்மை இல்லாமல் ஜனநாயகம் இல்லை ஜனநாயகம் இல்லாமல் சோஷலிஸம் இல்லை என்று கொர்பசேவ் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு கூறப்பட்டுள்ள ''திறந்த தன்மை'' என்பது உண்மையில் குருசேவ் காலத்தில் முன்வைக்கப்பட்ட, கட்சியை ஜனநாயகமயப்படுத்தல், ஸ்டாலினை அம்பலப்படுத்தல் என்றதை ஏறக்குறையக் கொண்டதாக உள்ளது. ஸ்டாலினை அம்பலப்படுத்தல் என்ற வார்த்தைக்குப் பதிலாக ''கடந்தகாலத்தை'' அம்பலப்படுத்தல் என்பது உள்ளது. நடைமுறையில் திறந்த தன்மை என்பது பிரஸ்னேவை அம்பலப்படுத்துவதிலேயே அதிக அக்கறை செலுத்தியுள்ளது. எனவே மறுசீரமைப்பு, திறந்த தன்மை என்பன திடீரென தோன்றிய ஒன்றல்ல என்பதும் நீண்டகாலமாக நிலவிவந்த ஒரு தேவையின் வெளிப்பாடுதான் என்பதும் தெளிவாகிறது.

சோவியத் யூனியனிலும் மற்றும் கிழக்கைரோப்பிய நாடுகளிலும், முழு ஐரோப்பாவிலும் இன்று ஏற்பட்டுள்ள அரசியல், இராணுவ மாற்றங்கள் பற்றி ஸ்ரான்லி ஆர். ஸ்லோன் என்பவர் முன்கூட்டியே எதிர்வு கூறியிருந்தார். கொர்பசேவ் பதவிக்கு வர முன்பு 1984-ம் ஆண்டு இவர் எழுதி வெளியிட்ட நேட்டோவின் எதிர்காலம் என்ற நூலில் இன்று கிழக்கைரோப்பாவிலும், ஜேர்மனியிலும் நடந்திருக்கும் மாற்றம்பற்றி அப்படியே படம்பிடித்துக் காட்டினாற்போல கூறியுள்ளார். பேர்லின் சுவர் உடையும். கிழக்கைரோப்பாவில் சந்தைப் பொருளாதாரம் தோன்றும். ஜனநாயகம் தோன்றும் என்பன போன்ற கருத்துக்களை இந்நூல் கொண்டுள்ளது.

எனவே சோவியத்யூனியனில் இடம்பெற்ற மாற்றம் ஒரு தற்செயலல்ல; அதாவது வரலாற்றுப் போக்கை சரிவர அவதானித்தால், அவ்வாறு அவதானிக்கும் சிறந்த வரலாற்றாசிரியரினால் எதிர்காலத்தில் நடக்கக் கூடியவற்றை எதிர்வு கூறுதல் சாத்தியம். கிழக்கைரோப்பாவையும்மற்றும்முழுஐரோப்பாவையும் ஸ்ரான்லி ஆர் ஸ்லோனால் கூர்மையாக அவதானிக்க முடிந்ததால் எதிர்காலத்தை எதிர்வுகூற முடிந்தது.

1985-ம் ஆண்டு கொர்பசேவ் கட்சியின் பொதுச்செயலாளராக வந்ததைத் தொடர்ந்து மாற்றம் கருக்கொண்டது. தொடங்கியது பெரஸ்ரொய்கா என்றபெயரில் இவர் எழுதி முன்வைத்த நூல்

(2ஆம் பக்கம் பார்க்க)

## விழுதுகள்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்தானே அம்மா'' என்று இவன் கேட்டதும் அந்தத் தாயினதும் சூழ இருந்தவர்களதும் சோகமெல்லாம் பகலவனைக் கண்ட பனித்திரையாகின. சோகத்துக்குள் சிரிப்பு. ''சரி போறதெல்லாம் போகட்டும் உனக்கொண்டும் இல்லையெண்டால் சரி வா சாப்பிடு'' என்றபடியே மீண்டும் தமது குஞ்சைக் காக்க புதுக்கூடு தேடினர் அந்த விடுதலைவிரும்பிகள். இந்திய இராணுவம்போகும்வரை இவனுக்கு அச்செழு பகுதிவீடுகள் வசதியாயிருந்தன.

இந்திய இராணுவத்துடன் எமது மண்ணில் காலடி எடுத்து வைத்த துரோகக் கும்பல்கள் மீதான தாக்குதலிலும் இவன் காயமடைந்தான். அதுவும் பாரதூரமான காயம் தான். அதிலும் இவன் தப்பிப் பிழைத்தான். சிறிலங்கா இராணுவத்துடனான மோதல் ஓய்ந்திருந்த காலத்தில் இவன் இயக்கத்தின் வாகனங்கள் திருத்தும் கராஜ் ஒன்றை நிர்வகித்துக் கொண்டிருந்தான். சிறிலங்கா இராணுவத்துடனான மோதல் மீண்டும் தொடங்கியதும் இவன் மீண்டும் போர்க்களத்துக்குத் தேவைப்பட்டான். இவன் ஒரு திறமையான சாரதியானதால் போர்க்களத்தில் இவனது தேவை அதிகமாக இருந்தது. கோட்டை முகாம் எமது கையில் கிடைக்கும்வரை குண்டு வீச்சு விமானங்களால் கொட்டப்பட்டுக்கொண்டிருந்த குண்டுகளின் இடைவெளிக்குள் இவனது வாகனம் போர்முனைக்குச் சென்று வந்துகொண்டிருந்தது. போர்க்களத்தில் விமானங்கள் வீசும் குண்டின் அதிர்வுகளைவிட இவனது கலகலப்பால் எழுந்த அதிர்வலைகள் கூடுதலாக இருந்ததைப் போராளிகள் உணர்ந்தனர். ஒருநாள் விமானக் குண்டுவீச்சினால் இவன் காயமுறநேர்ந்தது. ஆனாலும் பழைய சுபாவம்தான்.

கோட்டை முகாமைக் கைப்பற்றுவதற்கே வாகனத்தை ஓட்டிச் சென்ற போராளிகளில் இவனும் ஒருவன். இதற்கு முன்சென்ற வாகனம் வெடித்து உண்டாகியிருந்த குழிக்குள் இவனது வாகனம் சிக்கியபடியால் இவனால் தொடர்ந்து முன்னேற முடியவில்லை. மழையாய்ப் பொழிந்த ரவைகளுக்குள்ளும் விமானக் குண்டுகளுக்குமிடையில் எப்படியோ தப்பிப்பிழைத்து வந்தான் இவன்.

ஆனையிறவு முகாமுக்குள் கூட தான் தான் முன்னே செல்லவேண்டுமென அடம்பிடித்துக்கொண்டிருந்தான். தாக்குதல் நடைபெற்ற தினம் கூட என்றுமில்லாத உற்சாகத்துடன் - அட்டகாசமாகவே இருந்தான். வயிறமுட்டச் சாப்பிட்டுவிட்டுச் சென்ற தனது நண்பர்களைக் கூப்பிட்டு ''வா வா சாப்பிடு சாப்பிடு'' என்று சாப்பிடப்பண்ணிவிட்டு ''சராவின்ர சாப்பாட்டைத்தான் நீங்கள் சாப்பிட்டனீங்கள். இண்டைக்கு இவர் பட்டினிதான்'' என்று சரா வந்தவுடன் எவ்வாறு ஏமாறப் போகிறான் என்று நினைத்துச் சிரித்தான். சரா வந்ததும் விஷயம் அறிந்து துரத்தியதும் ஓடிப்போய்ச் சிரித்தான்.

அந்த நிமிடம் சாவு என்ற நிலையிலும் விடுதலைப்புலிகள் மனதில் எந்தக் கிலேசமோ, சிந்தனையோ இருப்பதில்லை என்பதற்கு இச்சம்பவம் சிறு உதாரணமே. இதனால்தான் இன்று உலகில் விடுதலைப்புலிகள் தனித்துவமானவர்களாக இனங்காணப்படுகிறார்கள்.

ஆனையிறவுமுகாம் தகர்ப்பு முயற்சியில் தான் ஒரு சிறந்த சாரதி என்பதை இவன் நிரூபித்தான், அத்தாக்குதலில் தனது இறுதி மூச்சுவரை சிங்களச் சிப்பாய்களின் மூச்சை நிறுத்தும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். இவனது மரணம் விடுதலைப்புலிகளின் காதுகளில் கலகலப்பை இழக்கச் செய்துவிட்டதுதான். ஆனால் இவனது நோக்கம் இலட்சியங்களை இழக்கச் செய்துவிடவில்லை. அதற்கு இன்னும் வலுவூட்டிக்கொண்டிருக்கிறது.


கோண்டாவில், யாழ்ப்பாணம் (பி எம். சி) அத்தியாவசிய சேவைகள் களஞ்சியங்களில் பொருள்களை லொறிகளில் இருந்து இறக்கி, நிறுத்து, அடுக்கி/நிறுத்து, லொறிகளில் ஏற்றுவதற்கான

**கூறுவிலை கோரல்**

கோண்டாவில், யாழ்ப்பாணம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் களஞ்சியங்களில் 01-09-91 முதல், 31-12-91 வரையிலான காலத்திற்கு லொறிகள் மூலம் கொண்டுவரப்படும் அரிசி. மாவு, சீனி போன்ற உலர் உணவுப் பொருள்களை இறக்கி நிறுத்து. அடுக்கி/நிறுத்து. ஏற்றுவதற்கு பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் சங்கங்கள்/ப. நோ. கூ. சங்கங்கள் மற்றும் இதே போன்ற சங்கங்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலைகள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் தயாரிக்கப்பட்டு, அரக்கு முத்திரை இடப்பட்டு, கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் ''பொருள்களை இறக்கி, ஏற்றுவதற்கான கூறுவிலை'' எனக் குறிப்பிடப்பட்டு, 21-08-91 ஆம் திகதிக்கு முன்னர் எனது அலுவலகத்தில் கூறுவிலை கோரல் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மாதிரி கூறுவிலை கோரல் படிவம்

1. கூறுவிலை கோரும் சங்கத்தின் பெயர்:-.................................................
2. நிரந்தர முகவரி:-.................................................................

3. சேவை — 50கி. கி — 75கி. கி — 1 மெ. தொ — 1 மெட். 10 அம தொ.

(1) லொறி அடுக்கிலிருந்து இறக்கிக் கொண்டு சென்று நிறுத்து களஞ்சியத்தினுள் அடுக்கல். (தேவையானவிடத்து கிழிந்திருக்கும் மூடைகளைத் தைக்க வேண்டியும் வரலாம்) .......... .......... .......... ..........

(2) களஞ்சிய அடுக்கிலிருந்து கொண்டு சென்று நிறுத்து லொறியினுள் ஏற்றி, அடுக்கல். (தேவையானவிடத்து கிழிந்திருப்பின் மூடைகளைத் தைக்க வேண்டியும் வரலாம்.) .......... .......... .......... ..........

4. களஞ்சியத்துனுள்ள மேற்குறிப்பிடப்பட்ட சாதாரண களஞ்சியத் தொழிலாளர் வேலை (நாளொன்றுக்கு ரூபா......................................)

செ. பத்மநாதன்,
திட்டப்பணிப்பாளர்,
யாழ். அரசாங்க அதிபருக்காக,
(B/ 2923)

..............................................
கையொப்பம், றப்பர் முத்திரை

திகதி: ........................................



**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



மேஜர் ஜேம்ஸ்
(உ. ஸ்ரீதர்)

வீரஜனனம்:
06-09-1962

வீர மரணம்:
09-08-1990

எங்களின் ஞாயிறே ஜேம்ஸ்!

வேதம் இசைத்த, வேங்கை மறவனே!
வேள்வி யாகம் வளர்த்த - சீல மைந்தனே!
நாதம் முழங்கியே, நல் வேளை புலர்ந்திட
நமக்கோர் நாடுந் தேடிய வீர இளைஞனே!
காலம் உருளும், கனவுகள் பெருகும் - நீ
காணவும் விழைந்த - ஈழமும் மலரும்
ஞாலம் போற்றும், நற்பணி நினைக்கும்
ஞாயிறின் உருவாய - ஜேம்ஸ்
உன் எழில் நாளுந் - துலங்கும்.

பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்

வல்வெட்டித்துறை,
(R/1622)

# 'ஆனையிறவில் நான்கு வாரப் பெரும்போர்' சிறிலங்கா திட்டமிட்டவாறு நடக்கவில்லை

ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் கடந்த யூலை மாதம் 10 ஆம் திகதி ஆரம்பித்த ''பெரும் போர்'' நான்காவது வாரத்தில் சற்றுத் தணிந்துள்ளது. நேரடிப் போர் நிகழ்ந்தகாலம், போரின் முஸ்தீபு, போரில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை, பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், வெடிப்பொருள்களின் அளவு என்பனவற்றின் அடிப்படையில் இதனை ஒரு ''பெரும் போர்'' எனக் குறிப்பிடுவதில் எந்தவிதத் தவறும் இல்லை. இப்போர் இலங்கையின் அரசியல், இராணுவ ரீதியில் பெரும் தாக்கத்தை விளைவித்த போர் என்பதிலும் சந்தேகம் இருக்கத்தேவையில்லை.

ஆனையிறவுப் போரின் ஒரு பகுதியான சிறிலங்கா இராணுவத்தின் முகாம் மீட்பு நடவடிக்கைக்கு ''ஒப்பரேசன்பலவேகய'' - பலம் பொருந்திய செயற்பாடு - என சிறிலங்கா இராணுவத் தரப்பினர் பெயர் குறிப்பிட்டதில் இருந்தும், போர்களுக்கெல்லாம் தாய், இறுதி யுத்தம் எனக் குறிப்பிட்டதில் இருந்தும் இப்போரின் முதன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

இதை வலியுறுத்துமாப் போலவே இப்போரின் இழப்புக்களும் அமைந்திருந்தன. முகாமில் இருந்த சுமார் ஆயிரம் இராணுவத்தை மீட்க வந்த சிறிலங்கா இராணுவம் முகாமில் இருந்த இராணுவத்தினரின் தொகையை விட கூடுதலான இராணுவத்தினரை இழந்தது. அதாவது உயிரிழந்தோ அல்லது இனி மேல் போர் நடவடிக்கையில் ஈடுபடுத்த முடியாதோ போனது. என்றுமில்லாதவாறு பல உயர் அதிகாரிகளையும் இழந்தது. சில படை அணிகள் முற்றாகச் சிதைந்தன. பல கனரக வாகனங்கள் அழிந்தன.

விடுதலைப் புலிகள் தரப்பிலும் பெரும் எண்ணிக்கையான போராளிகள் வீரமரணமடைந்தனர். பெருமளவு எண்ணிக்கையில் காயமடைந்தனர். 1983 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் கூர்மை அடைந்த பின்னர் விடுதலைப் புலிகள் தரப்பில் குறுகிய காலத்திற்குள் இவ்வளவு எண்ணிக்கையான போராளிகள் வீரமரணமடைந்ததில்லை.

### எதிர்பாராத போர் அல்ல

ஆனையிறவுப் போர் ஒரு எதிர்பாராமல் ஏற்பட்ட போர் அல்ல. இப்போர் எந்தத் திகதியில் ஆரம்பமாகும் என்பது மட்டுமே சந்தேகமாக இருந்தது. இதனைச் சிறிலங்கா இராணுவமும் நன்கு அறிந்திருந்தது. நான்கு மாதங்களின் முன்பே விடுதலைப் புலிகளின் போர் முஸ்தீபுகளை அறிந்திருந்த சிறிலங்கா இராணுவம் இது குறித்து விமானப்படை உலங்கு வானூர்திகளில் இருந்து துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்திருந்தது. அதைத் தொடர்ந்து முகாமைப் பலப்படுத்தியும் வந்தது.

இதன் பிரகாரம் ஆனையிறவு முகாமில் இராணுவத்தினரின் எண்ணிக்கை 500இல் இருந்து இரட்டிப்பாக்கப் பட்டது. மற்றும் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவு, மருந்து, வெடிமருந்துகள், ஆயுதங்கள் களஞ்சியப் படுத்தப் பட்டன. உப்புநீரை நன்னீராக்கும் இயந்திரம் ஒன்றும், தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரமும் ஆனையிறவு முகாமிற்குள் பொருத்தப்பட்டன. மேலதிகமாக ஜெனரேட்டர்களும், ஓர் ஆர். எம். பி. தலைமையில் சிகிச்சை நிலையமும் அமைக்கப்பட்டது இத்துடன் மேலதிகமாக டின்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகளும், ஊட்டச்சத்து வில்லைகளும் ஆனையிறவிற்கு வழங்கப்பட்டன.

கட்டளை பிறப்பிப்பதற்கு இரண்டு இராணுவ கட்டுப்பாட்டு நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இந்த ஆனையிறவுப் படை முகாமில் ஆறாவது சிங்கப் படைப் பிரிவு நிலைகொண்டிருந்தது. இவர்களுக்குத் துணையாக எப்பொழுதும் தயார் நிலையில் சிறிலங்கா விமானப்படை மார்ச்செட்டி குண்டுவீச்சு விமானங்களும், வை–8, வை-12, அவ்ரோ ஆகியனவும் குண்டுவீச வல்லவையாக மாற்றி அமைக்கப்பட்ட பயணிகள் விமானங்களும், அமெரிக்கத் தயாரிப்பான பீரங்கி பொருத்தப்பட்ட 'பெல்' ரக உலங்குவானூர்திகளும் தயார் நிலையில் இருந்தன.

### புலிகளின் முதலாவது வெற்றி

பத்தாம் திகதி புலிகள் இராணுவ முகாம் மீதான முற்றுகையை ஆரம்பித்து ஆனையிறவு முகாம் மீது தாக்குதலைத் தொடர்ந்தனர். இம் மோதல் அதிகாலை 3.30 மணியளவில் ஆரம்பித்தது. ஆனால் புலிகள் தாக்குதல் தொடங்குவதற்கு இரு தினங்களுக்கு முன்னதாகவே சிறிலங்கா விமானப்படை, விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கியிருந்தன. தொடர்ச்சியாக இரவுபகலாக அகோரக்குண்டுவீச்சுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்தன.

இந்நிலையில், பத்தாம் திகதி நள்ளிரவு விடுதலைப் புலிகளின் முகாம்மீதான முதலாவது அதிரடித் தாக்குதல் இடம் பெற்றது. இத்தாக்குதல் ஆனையிறவு உப்பள இராணுவ முகாமின் ஒரு பகுதியான உல்லாச விடுதிமீது மேற்கொள்ளப்பட்டது. ஒரு மணிநேரத்தில் உப்பள உல்லாசவிடுதி புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. ஒரு உயர் இராணுவ அதிகாரி உட்பட பல இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் மீட்கப் பட்டன.

2வது, 3வது பெரும் தாக்குதல்கள் குறிஞ்சாத்தீவு உப்பள விடுதிமீதும்,ஆனையிறவு இராணுவ முகாம் மீதும் முறையே 12ஆம், 13ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலினால் பல காவலரண்கள் பலத்த சேதமடைந்தன. ஆனால்இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் எதிர்பார்த்த வெற்றியை அடையவில்லை.குறிப்பிடக்கூடிய உயிரிழப்புக்கள் புலிகள் தரப்பில் ஏற்பட்டன.

ஆனால், இரண்டாவது 3-வது தாக்குதல்கள் யுத்த முனையில் சிறிலங்கா இராணுவத்தரப்பில் ஆனையிறவு முகாம் பாதுகாப்புத் தொடர்பான அச்சத்தை ஏற்படுத்தியது. உப்பள உல்லாசவிடுதி தாக்குதலுடன் போர் ஓயும் என எதிர்பார்த்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஆனையிறவுத் தாக்குதல்கள் தொடரும் என இத்தாக்குலுடன் முடிவிற்கு வந்தன.

இதுவரை ஒரு காவல் அரணையோ அன்றி முகாமின் ஒரு பகுதியையோ அழித்துவிட்டு புலிகள் பின்வாங்கி விடுவார்கள் என்ற சிறிலங்காவின் கணிப்பீடு தவறானது என்ற முடிவுக்கு வந்தனர். அதாவது ஆனையிறவு முகாமின் பாதுகாப்பு பற்றிய அச்சம் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களுக்கு ஏற்பட்டது. முகாமில் இருந்த காயமடைந்த இராணுவத்தினரை மீட்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

### "ஒப்பரேசன் பலவேகய"

இந்நிலையில் ஆனையிறவு இராணுவ முகாம் முற்றுகையை உடைத்து ஆனையிறவு முகாமைப் பாதுகாக்க விசேட படைப் பிரிவுகள் அனுப்பப்படவேண்டும் என பாதுகாப்பு வட்டாரங்களில் ஆலோசிக்கப்பட்டது. இதன் பிரகாரம் ஒப்பரேசன் பலவேகய திட்டம் தயாரானது

இத்தாக்குதல் திட்டம் அநுராதபுரம் இரண்டாவது தாக்குதல் பிரிவு தலைமை அலுவலகத்தில் தீட்டப்பட்டது. இத்திட்டம் தீட்டப்படும் போது ஆனையிறவு நிலைமை மிகவும் மோசமாக இருந்ததனால் இராணுவம் விரைவாகச் செயற்பட வேண்டியிருந்தது என இராணுவ அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. முள்ளியவளை, வற்றாப்பளை பகுதியில் தாக்குதல் நடத்த தயாராக வைக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் தாமதிக்க முடியாத காரணத்தினால் இத்தாக்குதலுக்குப் பயன் படுத்தப்பட்டனர்.

இந்நிலையினை அவதானிக்கும் போது ஆனையிறவு இராணுவ முகாமின் பாதுகாப்பு தொடர்பாக இராணுவத் தரப்பினர் கொண்டிருந்த நம்பிக்கை விடுதலைப் புலிகளின் மூன்று நாட் தாக்குதலில் சிதறடிக்கப்பட்டதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

''ஒப்பரேசன் பலவேகய'' சகல தாக்குதல் திட்டத்திற்கும் பொறுப்பாக வடமாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ (இரண்டாவது தாக்குதல் பிரிவுத் தலைவர்) தலைமை தாங்கினார். தரைப் போருக்கு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்னா தலைமை தாங்கினார்.

இத்தாக்குதலில் இரண்டு படை அணிகள் பயன்படுத்தப்பட்டன. இதில் முதலாவது படையணி இரண்டு படைப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. இதற்கு கேணல் சரத் பொன்சேகா தலைமை தாங்கினார். இவரின் கீழ் இருந்த முதலாவது கஜபாகு படைப்பிரிவிற்கு லெப். கேணல் லோறன்ஸ்பெர்னான்டோவும், ஆறாவது சிங்கப் படை அணிக்கு மேஜர் பராக்கிரம பனிப்பிட்டியாவும் தலைமை தாங்கினர்.

இரண்டாவது படை அணியும் இரண்டு படைப் பிரிவுகளைக்கொண்டிருந்தது.இதற்கு மேஜர் சரத் கருணாரட்னா தலைமை தாங்கினார். இதில் இருந்த மூன்றாவது கஜபாகு படை அணிக்கு லெப். கேணல் சீவாலியும், மூன்றாவது சிறிலங்கா காலாட் படைப் பிரிவிற்கு லெப். கேணல் காமினி ஜெயசுந்தரவும் தலைமை தாங்கினர்.

மொத்தம் இரண்டாயிரம் பேர் வரையில் கொண்ட இப்படையணிகள் கடற்படையின் உதவியுடன் தரையிறக்கப்படுவதெனவும், விமானப் படையின் உதவியுடன் திறந்த வெளியூடாக முன்னேறி மிக விரைவில் ஆனையிறவு முகாமை அடைவதெனவும் திட்டமிடப்பட்டது.

விமானப்படையின் உதவியுடன் திறந்த வெளிப் பகுதி ஊடாக முன்னேறும்போது புலிகளின் எதிர்த்தாக்குதல் இருக்கமாட்டாது என்பதே திறந்த வெளி ஊடாக முன்னேறும் திட்டத்திற்கு முக்கிய காரணமாகும்.

அத்தோடு முல்லைத்தீவுப் பகுதியில் தாக்குதலுக்குத் தயாராக இராணுவத்திடம் இருந்ததிலும், தரையிறக்கத் திட்டமிடப்பட்ட இடத்திற்கு அண்மையாக இராணுவம் இருந்ததினாலும் நகர்த்துவது இராணுவ பீடத்திற்கு இலகுவானதாக இருந்தது. படை அணிகள் தூரத்தில் இருந்து நகர்த்துவதாய் இருந்தால் இராணுவத்திற்கு பெரும் சிரமமாக இருந்திருக்கும்.

திட்டமிட்டபடி புல்மோட்டை கனிவளக் கூட்டுத்தாபன இறங்குதுறையில் இருந்து 'எடித்தாரா' என்னும் கப்பலில் சனிக்கிழமை (13-07-1991) மாலை 'ஒபரேசன் பலவேகய' இராணுவம் புறப்பட்டது. அன்று இரவே 'எடித்தாரா' கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிக் கரையில் இருந்து 10 மைல் தொலைவில் நங்கூரமிட்டன.

இதைத் தொடர்ந்து தரையிறக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தரையிறக்கும் இராணுவத்திற்கு ஆதரவாக திட்டமிட்டபடியே சனிக்கிழமை பிற்பகலில் இருந்தே இரண்டு சியாய் மாச்செட்டி குண்டுவீச்சு விமா மானங்களும், இரண்டு உலங்குவானூர்திகளும். ஒரு வை - 12 ரக விமானமும் கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிப் பகுதியில் தீவிரதாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதல்கள் தொடர்ந்தும் அடுத்த நாள் வரையும் நீடித்தது, மேலும் திட்டமிட்டவாறு தரையிறக்கத்திற்கென இரண்டுகட்டளையிடும்தாய்க் கப்பல் உட்பட சிறிலங்கா கப்பற்படையின் பெரும்பலமும் பயன்படுத்தப்பட்டது. இதில் மேலும்நான்கு பீரங்கிப் படகுகள், 4டோரா இன அதிவேகத் தாக்குதற் படகுகள், 3 தரையிறங்கும் படகுகள், ஒரு அதிவேக ஆட்களை ஏற்றும் படகுகள், இருபத்தைந்திற்கும் மேற்பட்ட அதிவேக ரோந்துப்படகுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. அதே வேளை காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்ய பயணிகள் கப்பல் ஒன்று மாற்றி அமைக்கப்பட்டிருந்தது.

இக் கடற்படைப் பீரங்கிப் படகுகளும் சனிக்கிழமை மாலையில் இருந்தே பலத்த பீரங்கித் தாக்குதலை கரையோரத்தை நோக்கி மேற்கொண்ட வண்ணமிருந்தன.

ஆனால்அடுத்தநாள் ஞாயிற்றுக் கிழமை பகல் இராணுவம் தரையிறங்க எடுத்த முயற்சிகள் புலிகளால் முறியடிக்கப்பட்டன. மாலையில் புலிகளின் தாக்குதலின் மத்தியிலும் இராணுவம் தரையிறங்கியது தரையிறங்கியமுதலாவது இராணுவ அணியானதுகண்ணிவெடி அகற்றும் பொறியியலாளர்களைப் பெருமளவில் கொண்டிருந்தது.

தரையிறங்குவதற்கு 24 வீசைப்படகுகளை இராணுவம் பயன்படுத்தியது. இதில் ஒரு படகின் அதிகாரி புலிகளின் தாக்குதலினால் காயமடைந்ததனால் படகு படையினருடன் திரும்பிச் செல்ல நேரிட்டது.

தரையிறங்கியபோதும் இராணுவம் புலிகளின் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தது: லெப். பாலியாகுரு உட்பட பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

தரையிறங்கிய இராணுவத்தினருடன் முதல் இரு நாட்களிலுமே 60வாகனங்கள் தரையிறக்கப்பட்டன. அதில் கவச வாகனங்கள், ஜீப்புக்கள், எரிபொருள், நீர்த்தாங்கிகள், புல்டோசர்கள், உழவு இயந்திரங்கள் என்பனவும் அடங்கியிருந்தன.

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய இராணுவம் அதன் தெற்கே சுமார் ஒருமைல் தொலைவில் உள்ள இரண்டு சிறிய டச்சுக் கோட்டைகளை நோக்கி முன்னேறியது. ஆனால் இராணுவம் எதிர்பார்த்த மாதிரி திறந்தவெளியில் முன்னேற்றம் இலகுவானதாக இருக்கவில்லை விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியதாயிருந்தது. இரு பகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட கடும் மோதல்களில் இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர்.

இம் மோதல்களின் போது இராணுவம் 120 மி. மீ. மோட்டர் களையும் 105மி.மீ ஆர் சி. எல். வாகனத்தில் பொருத்தக் கூடிய பீரங்கிகளையும், 25 மி.மீ, 37மி.மீ, பீரங்கிகளையும் பயன்படுத்தியது புலிகளும் சிறுரக பீரங்கிகளைப் பயன்படுத்தினர். பல இராணுவ கவசவாகனங்களை அழித்தனர்.

### புலிகளின் இரண்டாவது வெற்றி

தரையிறங்கிய இராணுவத்தினரின் மீது விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான கடும் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த வேளை முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தின் மீது பதினேழாம் திகதி இரவு ஒரு பலமான தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

இத்தாக்குதல் சிறிலங்காவின் படையணியைக் குறிப்பிடக் கூடிய அளவில் சிதைத்தது. பல கவசவாகனங்கள் சேதமாயின. இத் தாக்குதலின் போது சிறிலங்கா தரப்பில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தரையிறங்கிய இராணுவத்திற்கு 2 ஆவது கட்டளை இடும் அதிகாரியாக இருந்த மேஜர் எஞ்சலோ பீரிஸ் கொல்லப்பட்டார். இவர் மரணத்தின் பின் லெப். கேணலாக பதவி உயர்வு பெற்றார்.

இத் தாக்குதலின் போது தரையிறங்கிய இராணுவத்திற்கு பொறுப்பாளரும், யாழ் மாவட்ட இராணுவத் தளபதியுமான பிரிகேடியர் விஜே விமல ரெட்னாவும், லெப். கேணல் பி. குலதுங்காவும் லெப். கேணல் சமாதுங்கனும் மேஜர் டாக்டர்) ஹில்மன் சில்வாவும் ஒருசமயம் புலிகளின் வியூகத்திற்குள் சிக்கியிருந்தனர். அவர்களின் பின்னால் வந்த படையணியே பெரும் முயற்சி எடுத்துப் பெரும் இழப்பின் பின் அவர்களை மீட்டுக் கொண்டது.பல மணிநேரம் ஏற்பட்ட இக்கடும் மோதலின் பின்னர் இராணுவத்தினர் போர்முனை ஆயுதங்கள், வைத்தியப்பிரிவு என்பனவற்றுடன் பின்வாங்க வேண்டி ஏற்பட்டது.

இத்தாக்குதலினால் சிதைந்திருந்த இராணுவத்தினர் மீது அடுத்து நான்கு நாட்களின் பின் மீண்டும் ஒரு அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. 20 -ம் திகதியும் 21-ம் திகதியும் நடந்த இம்மோதலில் நூற்றிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புல்லாவெளிவரையிலும் முன்னேறியிருந்த இராணுவம் முள்ளியானில் ஊடறுக்கப்பட்டது. இராணுவம் இணைந்து கொள்வதற்காக பெரும் உயிரிழப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. இராணுவத்தினர் சடலங்களையும் ஆயுதங்களையும் விட்டுவிட்டு ஓடவேண்டியிருந்தது. புலிகள் சடலங்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு ஐரோ. அகதிகளுக்கு ஜேர்மன் கதவடைப்பு

(பொன்)

கிழக்கைரோப்பிய நாடுகளின் அகதிகளுக்கு ஜேர்மனி கதவடைப்புச் செய்ய முனைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ஜேர்மன் வெளிநாட்டமைச்சர் ஹென்சன் அவர்கள் இனிமேலும் செக்கோஸ்லவாக்கியா, போலந்து, ஹங்கேரி, பல்கேரியா, ரூமேனியா ஆகிய பகுதிகளில் இருந்து வரும் அகதிகளை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசியல் தஞ்சம் கோருவதாக கூறுவதை ஒப்புக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாக தெட்டத் தெளிவாக கூறியுள்ளார். அகதிகள் வரவைத் தடுக்கும் முகமாக அரசியலமைப்புத் திருத்தம் தேவைப்பட்டாலும் ஜேர்மனி அதையும் செய்யும் என அவர் தெரிவித்தார்.

**அத்தியாவசிய**

போது அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வடக்கு, கிழக்கு பகுதிக்கு எடுத்துச் செல்ல கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருட்களின் பட்டியலை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவார் என்றும், கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்களைத் தவிர ஏனையவற்றை, வர்த்தகர்கள் அரசாங்கசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார்கள் எந்தவித கட்டுப்பாடுமின்றி வடக்கு கிழக்கு பகுதிக்கு எடுத்துச் செல்ல முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

**சிப்பாய்கள்**

சாலையிலிருந்து ஏற்றப்படுகின்றன.

தமிழ்ச் சாரதிகளே அந்த லொறிகளை ஓட்டிச் செல்லதாகவும், அந்த லொறிகளில் பாதுகாப்பு வழங்கும் முகமாக ஏறிச் செல்லும் இராணுவத்தினர், இறந்து போகும் இராணுவத்தினரின் தொகையை எண்ணி ஆத்திரமடைந்து தமிழ் லொறிச் சாரதிகளைத் தாக்குவதாகவும் கூறப்பட்டது.

இராணுவத்தின் நடவடிக்கைக்கு அஞ்சி லொறியை விட்டுவிட்டு, வடபகுதி நோக்கி வந்த சாரதியொருவர், இதனைத் தெரிவித்தார்.(தி)

**முரல்**

என்பவர் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது கட்டுமரத்திற்கு மேலால் பாய்ந்த முரல் மீன் ஒன்று அவரது வயிற்றில் குத்தியது. இதனால்வயிற்றில்மூன்று அங்குலத்திற்குத்துளையேற்பட்டது. இவர்தற்போதுசிகிச்சை பெற்றுவருகிறார். (ச)

**கல்வியமைச்சின்**

திணைக்களங்களுக்கு தனிச் சிங்களத்தில் மட்டுமே கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. அதேபோன்று 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையும் ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சையும் நடைபெறும் திகதி மாற்றப்படுவது தொடர்பான பரீட்சை ஆணையாளரின் அறிவுறுத்தலும் தனிச் சிங்களத்தில் மட்டுமே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அதிபர் தரம் ஒன்றைச் சேர்ந்தவர்களின் இளைப்பாறுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என அதிபர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் கூட தனிச் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளன. தமிழ்மொழி பெயர்ப்பு இடம் பெறாததும் குறிப்பிடத்தக்கது.

இதனால் இக்கடிதங்களைப் பெறும் அதிகாரிகள் திண்டாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கடைகளில்திருட்டு

(ஈச்சமோட்டை)

சென்ற செவ்வாய்க்கிழமை இரண்டு கடைகளில் பல ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. அரியாலையில் உள்ள ஸ்ரீ பாபா ரெக்ஸ்ரைல்ஸில் உடுபுடைவைகள் களவாடப்பட்டுள்ளன. கொழும்புத்துறை கே. வி. றோட்டில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து அரிசி, சீனி, மா உட்பட சிறிதளவுபணத்தையும்திருடர்கள் களவாடி சென்றுள்ளனர். (43)

## 5 பிள்ளைகளின் தாய் தற்கொலை

(சுன்னாகம்)

கந்தர்மடத்தைச் சேர்ந்த சௌந்தரராயன் ராசம் என்னும் (35 வயது) குடும்பப் பெண் அலரிக்காய் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மேற்படி பெண் நேற்று பிற்பகல் 4 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானார். இவர் ஐந்து பிள்ளைகளின் தாயாராவார் (60)

## முகாமைத்துவ பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

தரம் 1 பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறி எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஐந்து நாட்கள் யாழ். கல்வித்திணைக்கள மாவட்ட முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளன. இப்பயிற்சி நெறியில் பங்கு பற்ற விரும்பும் கொத்தணி அதிபர்கள் அல்லாத தரம் 1 பாடசாலையைச் சேர்ந்த அதிபர்களும், கடமை பார்க்கும் அதிபர்களும் தமது பெயர்களை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (மு)

### அணு ஆயுதம் தயாரிக்கும்

## ஆற்றல் இருப்பினும் ஆக்கத்திற்கே பயன்படும்

### -- சரத்பவார்

(பம்பாய்)

இந்தியாவிற்கு அணு ஆயுதங்கள் தயாரிக்கும் ஆற்றல் இருந்தாலும் இந்தியா ஆக்கபூர்வமான பணிகளுக்கே அணு சக்தியைப் பயன்படுத்துவது என்று உறுதி கொண்டிருக்கிறது என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பம்பாயில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சரத்பவார் அணு ஆயுத பெருக்கத்தில் இந்தியாவிற்கு நம்பிக்கையில்லை என்றும், பாதுகாப்புத்துறை விஞ்ஞானிகள் பல்வேறு நவீன ஆயுதங்களை இந்தியாவிலேயே தயாரித்து பயன்படுத்துகிறார்கள் என்றும், உலக ஆயுத சந்தையில் இந்தியாவும் நுழைவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

## சபாநாயகர் ஆசனம் முன் பா. ஜனதா சத்தியாக்கிரகம்

இந்திய பாராளுமன்றமான லோக்சபாவில் நேற்றுக் கூச்சலும் குழப்பமும் நிலவியதுடன் பாரதீய ஜனதாக் கட்சியினர் சபாநாயகர் இருக்கைக்கு முன்பாக அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். சிவில் விமான போக்குவரத்துறை அமைச்சர் மாதவராவ் சிந்தியா பாரதீய ஜனதா கட்சியினரை தேசவிரோத சக்திகள் என நேற்றுமுன்தினம் வர்ணித்ததன் எதிரொலியாகச் சபையில் குழப்பம் ஏற்பட்டது.

இதுபற்றி நேற்று அமைச்சர் மாதவராவ் சிந்தியா அளித்த விளக்கத்தை ஏற்க மறுத்த பாரதீய ஜனதாக் கட்சியினர் அவரை ராஜினாமாச் செய்யும்படி கோரினர்.

இதனிடையில் பாரதீய ஜனதா நாட்டை வகுப்புவாதப் போக்கில் பிளவுபடுத்தும் நோக்குடன் நடத்திச் செல்வதாக இந்திரா காங்கிரஸ் கட்சி கண்டனம் செய்திருப்பதுடன் ஜனநாயக மரபுகளில் நம்பிக்கையுள்ள சக்திகள் அரசின் நிலையை ஆதரிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

**மகளை**

றைச் சேர்ந்த நடேசபிள்ளை சின்னம்மா குடும்பத்தினர் தமது இருபது வயது மகள் கணேஸ்வரியைக் கடந்த நான்காம் திகதி பண்டத்தரிப்பு பிரதேசக் காரியாலயத்தில் ஒப்படைத்தனர். (ச)

**முன்னாள்**

இஸ்லாமியப் புரட்சியை அடுத்து நாட்டைவிட்டு வெளியேறிய ஹாபூர் பக்தியார் மீது பதினொரு ஆண்டுகளுக்கு முன்பும் ஒரு கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## விடுதலை

லெபனானில் பணயம் வைக்கப்பட்டிருந்த பிரிட்டனைச் சேர்ந்த தொலைக்காட்சி நிருபரான ஜோன் மெக்கார்தி விடுவிக்கப்பட்டுள்ளார். இவர் சிரியாவின் வெளிநாட்டமைச்சரால் டமாஸ்கஸில் இருக்கும் பிரிட்டன் தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

**அண்ணியைக்**

கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து கொலையாளி உடனடியாக ஒரு காட்டினுள் தலைமறைவானதாகவும்தெரிவிக்கப்பட்டது. (58)

## ஆனையிறவில்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

20, 21ஆம் திகதிகளில் புல்லாவெளியிலும், முள்ளியானிலும் வீழ்ந்த பலமான அடி சிறிலங்கா இராணுவஅணியை முற்றாகச் சிதைத்ததென்றே சொல்ல வேண்டும். இத்தாக்குதலுடன் இராணுவம் தனது தாக்குதல் திட்டத்தைக் கைவிட்டு சிதைந்த இராணுவ அணிகளை மாற்றுவதிலும், புதிய இராணுவ அணிகளை தரையிறக்குவதிலும் தனது கவனத்தைச் செலுத்தியது.

அதாவது தரையிறக்கிய இராணுவத்தினரின் திட்டம் புலிகளால் தோற்கடிக்கப்பட்டது. திறந்தவெளியில் புலிகளிடம் இருந்து வந்த எதிர்ப்புஅவர்களை பிரமிப்பில் ஆழ்த்தியது. சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா போர் மிகக் கடுமையானதாகவுள்ளது; நீண்ட காலத்திற்குப் புலிகளை கெரில்லாப் படை அணியெனச்சொல்லிக்கொண்டிருக்க முடியாது. அவர்கள் அதிக மரபுப் படையினர் போல் தொழிற்படுகின்றார்கள் என்றார்.

ஒரு ஓய்வு பெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஆனையிறவுப் போர் இராணுவம் விரும்பியதுபோல் அல்லாமல், புலிகள் விரும்பியதுபோல் நடைபெறுகின்றதென்றார்.

அதேவேளை இந்த இரண்டாவது வெற்றி தனியாக வெற்றி மட்டுமல்லவிடுதலைப் புலிகளின் தளபதி ஒருவர் குறிப்பிட்டது போன்று இத்தாக்குதல் போரின் ஒரு திருப்பு முனையாகவும் அமைந்தது.

**பலவேகய இரண்டாம் கட்ட நடவடிக்கை**

''பலவேகய'' வின் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக மேலும் நான்கு இராணுவ அணிகள் வெற்றிலைக்கேணி-கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறக்கப்பட்டன. புதிதாகச் சேர்க்கப்பட்ட 5ஆவது கெமுனு காலாட் படைப் பிரிவிற்கு கேணல் ஜெயம்பதி விஜயரட்னாவும், நான்காவது சிங்கப்படைப் பிரிவிற்கு மேஜர் சுகந்தமென்டிஸும் தலைமை தாங்கினர். அதேவேளை 3ஆவது கஜபாகு படைப் பிரிவும், 3 ஆவது சிறிலங்கா காலாட்படைப் பிரிவும் களத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டன.

அத்தோடு சலாடின் போன்ற கவசவாகனங்களின் செயற்பாட்டில் திருப்தி அடையாத இராணுவத்தினர் 300 உழவு இயந்திரங்களையும் போர்முனைக்குத்தருவித்தனர்

அதேவேளை போர்முனையில் தனது முன்னேற்றம் தடைப்பட்டதும் சிறிலங்கா இராணுவத் தரப்பினர் தமது யுத்தமுறையே மாற்றப்பட்டதாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர் முதலில் ஆனையிறவில் இருந்து இயக்கச்சி ஊடாக ஆனையிறவு முகாம் நோக்கிச் செல்லவுள்ளதாகத் தெரிவித்த பாதுகாப்பு வட்டாரங்கள் தற்பொழுது ஆனையிறவு முகாமிற்குச் செல்வது எமது நோக்கமல்ல, புலிகளை வெளியே இழுத்து அழிப்பதே எமது நோக்கம் எனப் பிரசாரம் செய்தார்கள். புல்லவெளியில்தடைப்பட்ட தமது முன்னேற்றத்தை அவர்கள் இவ்வாறான பிரசாரத்தின் மூலம் மறைப்பதற்குத் திட்டமிட்டனர்.

**போர்களுக்கு எல்லாம் தாய்**

நான்கு நாட்கள் செய்த சீரமைப்பின் பின் இராணுவம் தாக்குதலுக்குத் தயாரானது. இந்த நான்கு நாள் தயாரின் போது சிறிலங்காவின் முப்படைகளின் முழுப்பலமும் ஒரே முகமாய்ப் பயன்படுத்தப்படுவதெனவும் 48 மணி நேரத்தில் ஆனையிறவு முகாமைச் சென்றடைவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பெருமளவு வெடிப்பொருள்களும் தரையிறக்கப்பட்டன. 26 ஆம் திகதிக்கு இடையில் தரையிறக்கப்பட்ட இராணுவத்திற்கு மட்டும் 250 தொன் வெடிப்பொருள் விநியோகிக்கப்பட்டது.

போர்களுக்கு எல்லாம் தாய் என சிறிலங்கா இராணுவத் தரப்பில் வர்ணிக்கப்பட்டது. இறுதிப்போர் தொடங்கி விட்டது எனவும் அறிவிக்கப்பட்டது. இதில் 8,000 இராணுவத்தினரும் நூற்றுக்கணக்கான கனரக வாகனங்களும் பங்குபற்றின. ஆனால் இராணுவம் எதிர்பார்த்த வேகத்திலும் எதிர்பார்த்த திசையிலும் முன்னேற்றம் இருக்கவில்லை. 26 ஆம், 27 ஆம் திகதி மோதல்களில் ஒரு கிலோ மீற்றருக்கும் குறைவாகவே முன்னேற முடிந்தது.

அதேவேளை முகாமின் குறிஞ்சாத்தீவு உப்பளம் விடுதிக் காவல் அரண்கள் மீது புலிகள் உக்கிரத் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். பல காவலரண்கள் புலிகளால் அழிக்கப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; காயமடைந்தனர். புலிகள் தரப்பில் பலர் படுகாயம் அடைந்தனர். ஆனால்புலிகள் தாம்ஊடுருவி அழித்த காவல் அரண்களில் நிலை கொள்ளாமல் பின்வாங்கி இருந்தனர்

27 ஆம் திகதி இராணுவ முகாம் மீதான தாக்குதல் புலிகள் தரப்பில் குறிப்பிடக்கூடிய உயிரிழப்பை ஏற்படுத்தியது. ஆயினும் பலவேகயவின் இரண்டாவது திட்டத்தையும் மாற்றி அமைத்த தாக்குதலாகும்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து இறுதித் தாக்குதல் திட்டத்தில சிறிலங்கா இராணுவத்தினர் தமது தாக்குதல் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டி வந்தது. விரைவில் முகாம் சென்றடைய வேண்டிய நிர்ப்பந்தமும் அதிகரித்துக்கொண்டே வந்தது.

இந்நிலையில் வாடியடிச் சந்தியைக் கைப்பற்றி, அதனூடாக இயக்கச்சி சென்று ஆனையிறவு முகாம் நோக்கிச் செல்ல திட்டமிட்டிருந்த பலவேகயத் துருப்பினர் கொம்படியூடாக கடல் நீரேரியின் கரையோரமாக முகாம் செல்லத் தீர்மானித்து, ஒரு படைப்பிரிவு வாடியடி நோக்கி முன்னேறுவதுபோன்று தாக்குதல் நடத்திக் கொண்டிருக்க ஒரு பிரிவு சதுப்பு நிலப்பகுதியூடாக ஆனையிறவு முகாம் நோக்கிச் சென்றது.

திறந்த வெளிப்பரப்பில் சதுப்பு நிலப்பகுதியூடாக முன்னேறிய படைப்பிரிவுகூட புலிகளின் எதிர்த்தாக்குதலினால் பின்னடைவுகளைச் சந்தித்தது இறுதிப்போர் என முன்னர் அறிவித்ததன் பின்னர் மீண்டும் ஒரு தடவை இறுதிப் போர் என அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் சிறிலங்கா இராணுவத் தரப்பினருக்கு ஏற்பட்டது 26 ஆம் திகதி 48 மணிநேரத்தில் முகாம் சென்றடையலாம் என எதிர்பார்த்த படை அணி ஒரு வாரத்தின் பின் சுமார் 170 மணித்தியாலத்தின் பின் முகாம் சென்றடைந்தது.

இப்பெரும் போரில் சிறிலங்கா இராணுவத் தரப்பு எதிர்பார்த்த ஒரு விடயம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டது. அது ஆனையிறவு முகாமைத்தக்க வைத்துக் கொண்டமை. பேச்சுக்குக் குறிப்பிடுகையில் அது சிறிலங்கா இராணுவத்திற்கு வெற்றி என வாதிடலாம்.

ஆனால், இப்போர் ஆரம்பித்ததில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் எதிர்பார்த்த திசையில் செல்லவில்லை. முகாம் பாதுகாப்பு கேள்விக்குரியதாகியது தரை இறங்கிய படையணி அழிக்கப்பட்டது அல்லது சிதைக்கப்பட்டது. திட்டத்தின்படி முன்னேற முடியவில்லை. புதிய பாதை அமைக்கவேண்டி இருந்தது. இவை யாவற்றிற்கும் மேலாக பெரும் பொருள், உயிர் செலவில் இராணுவ முகாமைப பாதுகாக்கவேண்டி வந்தது. இதனை நோக்கும் போது பி பி. ஸி. தனது ஆய்வில் தெரிவித்தது போன்று சோளப் பொரியால் யானையைப்பிடிக்கவில்லை. பெரும் நிதி, உயிர் செலவால் பிடிக்கப்பட்டது தெரிகின்றது.

அதேவேளை புலிகள் தரப்பில் பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டாலும், சிறிலங்கா இராணுவ மேலாதிக்க கொள்கைக்கு பலத்த அடியொன்றைக் கொடுத்துள்ளார்கள். தென்னாசியாவில் ஒரு குறிப்பிடப்படும் சக்தியாக வளர்ந்துள்ளோம் என்பதை நிரூபித்துள்ளார்கள். அதேவேளை, விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கூறியது போன்று சிறிலங்காவின் இராணுவ சக்தியின் பலத்தை அறிவதற்கு ஒரு களமாக ஆனையிறவுப்போர் அமைந்துவிட்டது.

- ஜெயா

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.